விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 ஐப்பசி 15 முஹறம் 25 இதழ் 261
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1-11-83

## 'பாஸ்போர்ட்' கந்தோர் யாழ். நகரில் மூடப்பட்டது!

(கல்வியங்காடு)

யாழ். செயலகத்தில் இயங்கி வந்த குடியகல்வு, குடிவரவு திணைக்கள கந்தோர் (பாஸ்போர்ட்) தற்காலிகமாக மறு அறிவித்தல் வரும்வரை மூடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு யாழ். செயலகத்தில் திறக்கப்பட்டு இயங்கிவந்த 'பாஸ்போர்ட்' கந்தோர் திடீரென மேலிடத்தில் இருந்து வந்த பணிப்பின்பேரில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

'பாஸ்போர்ட்' பெறுவதற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் நேற்று இக்கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனாலும் கந்தோர் நேற்று மூடப்படும் நேரத்திலேயே இக்கந்தோரை தற்காலிகமாக மூடும்படியான உத்தரவு தலைநகரில் இருந்துவந்ததற்கமைய கந்தோர் தனது செயற்பாடுகளை நேற்று மாலையுடன் முடித்துக்கொண்டது.

இக்கந்தோர் நேற்று மூடப்பட்டாலும் இதற்குரிய தஸ்

(8ம் பக்கம் பார்க்க)

## எம்.ஜி.ஆர். அரசு மீது நம்பிக்கையில்லா பிரேரணை

(சென்னை)

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் இம்மாதம் 8-ம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது

இந்திய மார்க்ஸிஷ்க் கம்யூனிஸ் கட்சியின் சார்பில் அதன் துணைத்தலைவர் திரு ஆர் உமாநாத் சமர்ப்பித்த இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சபாநாயகர் திரு. ராஜாராம் அனுமதித்ததுடன் விவாதம்பற்றியும் நேற்று அறிவித்தார். (கு)

## ● சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோது......
# நள்ளிரவில் நடந்த துப்பாக்கி மோதல்!

## மட்டக்களப்பில் சம்பவம்; சில இளைஞர்கள் கைது!!

(நமது மட்டக்களப்பு நிருபர்கள்: இரா. துரைரத்தினம், இரா. உதயகுமார்)

சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டு நின்றதாகக் கூறப்படும் இளைஞர்கள் சிலருக்கும், பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கி மோதலை அடுத்து இளைஞர்கள் சிலர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். சில இளைஞர்கள் இத்துப்பாக்கிச் சமரின்போது தப்பிஓடிவிட்டனராம்!

மட்டக்களப்பு அரசடிச் சந்தியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் நாகப் படையைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் சிலஇளைஞர்கள் அரசடிச் சந்தியில் சிலசுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தனர் என்றும் அப்போது ரோந்து சுற்றிவந்த பொலிசாருக்கும் இவர்களுக்குமிடையே நடந்ததாகக் கூறப்படும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதை அடுத்து சிலர் மோட்டார்சைக்கிள்களிலும், சைக்கிள்களிலும் தப்பிஓடி விட்டதாகவும், சிலர் கைது செய்யப்பட்டதாகவும், சுவரொட்டியையும், ஒருமோட்டார் சைக்கிளையும், சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றி உள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பிரதேச

(8-ம் பக்கம் பார்க்க)

## கேரதீவு இயந்திரங்கள் கொள்ளை: பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவரின் கார் துப்பாக்கிமுனையில் கடத்தல்!

(மட்டுவில்)

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. க. நடராசாவின் இல்லத்திலிருந்து துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்டகார், கேரதீவு இயந்திரங்கள் கொள்ளைக்குப்பயன்படுத்தப்பட்டதாகப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

கேரதீவுதுறையில் இருந்த அறை ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த மகாதேவா தாம்போதியில் சேவையில் ஈடுபடும் பாதையின் மூன்று இயந்திரங்களும், 8 துப்பாக்கி வாலிபர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் திரு. நடராசாவின் இல்லத்திலிருந்து துப்பாக்கி முனையில் கடத்திச்செல்லப்பட்ட காரில் வந்த இளைஞர்களே இந்த இயந்திரங்களைக் கடத்திச்சென்

(8ம் பக்கம் பார்க்க)

## வவனியாவில் தடுக்கப்பட்ட அடுத்த பஸ்ஸும் விடுவிப்பு
### 75 'டைனமைற்'றுகள் கொண்ட பார்சல் இருந்ததாம்

(வவனியா)

வவனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டாவது மினி பஸ்ஸும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டது.

மினிபஸ் ஒன்றில் டைனமெட் பார்சல் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டதையடுத்து நேற்று முன்தினம் வவனியாவில் வைத்து இரண்டு மினி பஸ்கள் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் ஒரு பஸ் விடுவிக்கப்பட்டிருந்தது. மற்ற பஸ் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு 5000 ரூபாய் ரொக்கப் பிணையில் விடுவிக்கப்பட்டது

இந்த பஸ்ஸில் 75 டைனமைற்கள் கொண்ட பார்சல் கண்டுபிடிக்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது, இது தொடர்பாக புங்குடுதீவைச் சேர்ந்த 45 வயது மதிக்கத்தக்கவரான தணிகாசலம் என்பவர் சந்தேகததின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் டைனமெட் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று கூறியிருப்பதாகத் தெரிகின்றது.

சந்தேக நபரும் மினிபஸ்ஸும் வவனியா நீதவான் திரு. வெத்தகெதர முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு பஸ் பிணையில் விடுவிக்கப்பட்டது. சந்தேகநபர் நவம்பர் 14-ம் திகதிவரைக்கும் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

## இளைஞர்கள் கைது

[யாழ்ப்பாணம்]

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்களை இராணுவத்தினர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்

கோப்பாய்தெற்கு இருபாலை பழம் றோட்டைச் சேர்ந்த செல்லத்துரை சிறீதரன் (20 வயது), குணம் ஜெயபாலன் (19-வயது) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

நேற்றுக்காலை தங்கள் வீட்டுக்குச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோதே இருவரும் கைதுசெய்யப்பட்டார்க

(8ம் பக்கம் பார்க்க)

ISLAND
INSTITUTE,
58, ஸ்ரான்லி றோட், - யாழ்ப்பாணம்.
84 கலை, வர்த்தக
வகுப்புகள்
பகல் நேர வகுப்புகள்
ஆரம்பம் 1-11-1983
வார இறுதி வகுப்புகள்
ஆரம்பம் 5-11-1983
ஆசிரியர் குழு
சின்னத்தம்பி,
மனோகரன்,
தேவா, குமார்,
யோகன்,
குமரன்,
சண்,
தர்மலிங்கம்,
ENGLISH CLASSES
ஆரம்பம்: 15-11-1983
மேரி ஆனந்தன்,
தர்மலிங்கம்.
(9600)

## பாஷையூர் பிரசவவிடுதி சுற்று மதில் இடிக்கப்பட்டது! யாழ். பொலிஸில் ஆணையாளர் புகார்

[யாழ்ப்பாணம்]

பாஷையூர் பிரசவ விடுதி சுற்றுமதில் இடிக்கப்பட்டுள்ளதாக யாழ் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பிரசவவிடுதி வளவிற்குள் குடியேறியிருந்த குடும்பங்கள் கடந்த சிலதினங்களுக்கு முன் பொலிசாரின் உதவியுடன் யாழ். மாநகரசபை ஊழியரால் வெளியேற்றப்பட்டனர். இதன்பின்னரும் சில குடும்பங்கள் ஆஸ்பத்திரி வளவிற்குள் தங்கியிருந்தன.

நேற்று முன்தினமிரவு ஆஸ்பத்திரி சுற்றுமதில் உடைக்கப்பட்டிருப்பதாக சபை ஊழியர் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானத்தின் கவனத்திற்கு கொண்டுவந்ததைத் தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. [க]

## பாணந்துறையில் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் தமிழ் இளைஞர் ஒருவரை பாணந்துறையிலுள்ள வீடு ஒன்றில் வைத்து பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்ததர்மரட்ணம் என்ற இளைஞரே கைது செய்யப்பட்டவராவார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை பீச் ரோட்டில் (கஸ்ரம்ஸ் கந்தோருக்கு அண்மையில்) ஒரு பரப்பு காணி சுற்றுமதிலுடன் கடை, கிணறு மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியவர்: T. மதியாபரணம், கணேசவாசா, மெயின் ரோட், பருத்தித்துறை. 9616

கைதடி சந்திக்கும், நாவற்குழி றேயில்வே ஸ்ரேசனுக்குமிடையில் கண்டி ரோட்டில் கைதடி அனாதை இல்லத்திற்கு முன்பாக 200 யார் தூரத்தில் வீடு கட்டுவதற்கு சற்சதுரமான 4 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். S.யோகநாதன், C.T.B.உத்தியோகத்தர், ஊரெழு அம்மன் கோவிலடி, ஊரெழு. 9587

முல்லைத்தீவு மெயின் வீதியில் அமைந்துள்ள 'சரவணாஸ்' என்னும் உதிரிப்பாக விற்பனை நிலையம் விற்பனைக்குண்டு விலை விபரங்களுக்கு: சரவணாஸ், முல்லைத்தீவு. 9585

மாவிட்டபுரம்-கீரிமலை வீதியில் கந்தசாமிகோவிலிலிருந்து ¼ கட்டை தூரத்தில், தொழிற்சாலை அமைக்கக் கூடிய சகல வசதியும் கொண்ட 9½ பரப்பு ரோட்டோரக்காணியும், கரணவாய் வடக்கு, யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் 11½ (நெற்) பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு-மல்ரி சேவிசஸ், 87 (351) மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 9578

தோலுடன் தேங்காய் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். பாலசிங்கம் C/o பரமசிவம்பிள்ளை பிறக்டர், 80, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 9625

யாழ்ப்பாணம்-கொட்டடி ஆஸ்பத்திரி வீதியில், சுமார் 150 யார் உள்ளே காணி, 8 பரப்பு பெரிய கடைக்கு சமீபம். தொடர்பு கொள்ளவும். திருமதி குருசாமி, 48, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி அல்லது தில்லையம்பலம், 21, சீனிவாசகம் வீதி, கொட்டடி. 9623

பட்டடைப்பெட்டி, நெல்லுப் போடக்கூடிய பெட்டி, பிள்ளைத்தொட்டில், சேந்தில் கட்டில், பேக்கரி சைக்கிள். தூக்குத்தராசு விற்பனைக்கு உண்டு. ஐ. சபாரத்தினம், 115/2, சபாஸ்லேன், அரசடி வீதி, யாழ்ப்பாணம். 9635

## வாடகைக்கு

கே. கே. எஸ். ரோட்டில் வாடகைக்கு கொடுப்பதற்கு தளபாடங்களுடன் நகைக் கடை ஒன்று நல்ல நிலையிலுள்ளது. தொடர்பு: வ.வயித்திலிங்கம் லிங்கம் எலக்றிக்கல் வெல்டிங் வேக்ஸ் 72/3 (புதிய இல 174) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 9582

## வகுப்பு

வெல்டிங் குறுகியகால பயிற்சி வகுப்புகள் (செய்முறையுடன்) 2-11-83 ல் ஆரம்பமாகின்றன. முதல் பதிவு செய்யும் மாணவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். யாழ். நகரில் கல்விப்பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேஒரு கல்லூரி. சர்வதேச புகழ் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். விபரத்துக்கு;- அதிபர், உயர்கலைக்கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9598

## தேவை

புகழ்பெற்ற திருமணம் நிறைவேற்றும் ஸ்தாபனத்தின் கிளை நிறுவ யாழ்ப்பாணத்தில் ஒரு அறை தேவை. மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. 9615

நல்ல அனுபவமுள்ள மோட்டர் மெக்கானிக்குகள் உடனடியாகத் தேவை. விண்ணப்பிக்கவும்: ஸ்ரான்லி மோட்டோர்ஸ், 52, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், ஜோர்ஜ் கராச், விக்ரோறியா ரோட் சந்தி. 9631

33, 36 வயதுடைய இரு மணமகளுக்கு உயர்தராதரமுடைய மணமகன் தேவை. விரும்பினால் நைஜீரியாவில் வேலை பெற்றுத் தருவார்கள். இன்னும் பல மணமக்கள் உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். அல்லது விண்ணப்பிக்கவும். விரைவில் நிறைவேற்றுவோம். மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை 9614

வருமானவரிக் கணக்குகள் எழுதத்தெரிந்த அனுபவம் உள்ள கணக்குப்பிள்ளைக்கு வேலை தேவை. தொடர்பு கொள்க. விளம்பர இல. 9608, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9608

## மின்சாரம் இருந்தும் வீடுகளில் விளக்கு

(கரவெட்டி)

நெல்லியடி மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தின் கண்காணிப்பின் கீழ் மின் விநியோகம் பெறும் கரவெட்டி பழையஆஸ்பத்திரி வீதிப்பகுதி மக்கள் மின்சாரம் இருந்தும் மண்ணெண்ணெய் விளக்குகளை உபயோகிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இங்கு வழங்கப்படும் மின் ஓட்டம் மிகக் குறைந்த அளவாக இருப்பதனால் இப்பகுதி வீடுகளிலுள்ள மின்குமிழ்களின் இழைகள் தணல் குச்சுபோன்று ஒளிர்கின்றனவாம்.

இதனால் இப்பகுதி மக்கள் குறிப்பாக மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

## விற்பனைக்கு

**(1) நல்லூர்**

வீடுகளும் வீடு கட்டக் காணியும் உண்டு.

**(2) கைதடி**

வீடுகளும், வீடு கட்ட, தொழிற்சாலை அமைக்க காணிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:

விளம்பரதாரர்,
52, வைமன் வீதி,
நல்லூர்.
தொலைபேசி : 22334
(9638)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## காமதேனு சுத்திகரிக்கப்பட்ட பால்

01-11-83 முதல் 500 மி.லீ. சில்லறை விலை

| | | |
|---|---|---|
| கிளிநொச்சி தொகுதி | ரூபா | 3/00 |
| வவுனியா-முல்லைத்தீவு தொகுதி | ரூபா | 3/15 |
| யாழ். மாவட்டம் (ஊர்காவற்றுறை தொகுதி தவிர) | ரூபா | 3/15 |
| ஊர்காவற்றுறை தொகுதி | ரூபா | 3/20 |

★ சமையலுக்கும் உகந்தது ★

**அம்பேவலை ஹைலன்ட் (HIGHLAND)**

பால் மா - 400 கிராம் ரூபா 20/-

தொகை விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம். விசேட கழிவு உண்டு.

விலை விபரங்களுக்கு:

தொழிற்சாலை முகாமையாளர்,
பால் சபை - கிளிநொச்சி. (9628)

ஓம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ருதிரோற்காரி வருடம் ஐப்பசி மாதம் 16 ந் திகதி (2-11-83) புதன்கிழமை காலை 9-20 மணியளவில் வரும் தனுலக்கின சுபமுகூர்த்தவேளையில்

எங்கள் திருநிறை செல்வன் **பஞ்சநாதன்** அவர்களுக்கும் (அசோகா போ. வ. உரிமையாளர், ஸ்ரீ விஷ்ணு அசோசியேட்ஸ் பங்காளர், கொழும்பு-11)

எனது திருநிறை செல்வி **மகேஸ்வரி** அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு, தொண்டமனாறு செல்வச்சன்னதி முருகன் ஆலயத்தில் நடைபெற இருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்கள் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் இல்லத்தில் கொண்டாட்டம் 4 நாட்கள் வரை நடைபெறும்.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்

திருமதி. கைலாசபிள்ளை உடையார் குடும்பத்தினர்
கரிப்பட்ட முறிப்பு,
மாங்குளம்.

வ. பொன்னையா குடும்பத்தினர்
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(9624)

## கொழும்பு நாட்டியக்ஷேத்திரா- அனுஷா

சென்னை கலாக்ஷேத்திரா ருக்மிணிதேவியின் சிஷ்யையும், சிறப்பு 'டிப்பிளோமா' பட்டதாரியும், கொழும்பு விவேகானந்த சபையின் முன்னைநாள் நடன அதிபருமாகிய அனுஷா தர்மராஜா நீர்வாவியடி கடைச்சாமி வீதியில், நடேசர் கோவிலில் உள்ள ''நடனபதி''யில் நடன வகுப்புகளை நடாத்துகிறார்.

வாரந்தோறும் சனி, ஞாயிறு காலை 9—12 வரை வகுப்புகள் நடைபெறும்.

9622

## 31ம் நாள் நினைவாஞ்சலி

2-11-83



மலர்வு: 13-8-1905

உதிர்வு: 3-10-1983

இசைமேதை அமரர்
**திரு. ஐ. சித்திவிநாயகம்**
(பாகவதர்)

அன்பிற் சிறந்த எமது குடும்பத் தலைவரே,
பண்பு உள்ளம் கொண்ட உறவினரே,
தமிழோடு இசை கற்பித்த நல்லாசிரியரே,
எமது கிராமத்தின் பெரியவரே,
உங்கள் பிரிவால் மிகவும் வருந்துகிறோம்.
இறைவன் நிழலிலே உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்!

மனைவி மகேஸ்வரி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர், இசை மாணவ-மாணவிகள். அச்சுவேலி தெற்கு.

9632

உ

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் ருதிரோற்காரி ஆண்டு ஐப்பசித் திங்கள் 16-ம் நாள் (2-11-1983) புதன்கிழமை முற்பகல் 9-16 மணி முதல் 10-04 மணி வரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது ஜ்யேஷ்ட புத்திரன் சிரஞ்சீவி 'ஸாஹித்திய சிரோன்மணி' 'வித்தியாகல்பநிதி' **முத்துக்குமாரஸ்வாமிக் குருக்கள்**

எமது கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி **பர்வதவர்த்தினியை**

மணமகளில்லத்தில் கன்னிகாதான பாணிக்கிரஹண திருமாங்கல்ய தாரணஞ் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் தாங்கள் சுற்றஞ்சூழ குடும்பசகிதம் வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

வை. மு. பரமசாமிக் குருக்கள்
இராஜேஸ்வரி அம்மா
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

ப. வேதக்குட்டிக் குருக்கள்
சிவன்கோவில்
ஆவரங்கால்.

**மணமகனில்லத்தில்:**

2-11-83 புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு சமாவர்த்தனம் மாலை 5 மணிக்கு வதூவர கிருகப்பிரவேசமும்— வரவேற்புபசாரமும்.

**வரவேற்பாளர்கள்:**

இ. ஸ்ரீரங்கநாதக் குருக்கள் தம்பதியும், சகோதரர்களும், ப. பாலாம்பிகை

வே. நடராசக் குருக்கள் தம்பதி
வே. தியாராஜ சர்மா தம்பதி
வே. சரண்யபுரீஸ்வர சர்மா

9629

# கிரனடாவின் எதிர்ப்புப் பகுதிகளை அழிக்கும்பணியில் அமெ. துருப்புகள்!

**சென்ஜோர்ஜ், அக்.31**

**கரீபியன்தீவான கிரனடாவில் அமெரிக்கத் துருப்புகள் எதிர்ப்புப் பகுதிகளை அழிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது.**

கிரனடாவில் நேற்று அமெரிக்க துருப்புகளுக்கும் எதிர்ப்புப் படைகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் ஐந்து அமெரிக்க வீரர்கள் பலியானர்கள். கிரனடாவில் பலியான அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கை தற்போது பதினருக அதிகரித்துள்ளது.

கிரனடாதீவின் மத்திய மலைப் பகுதியில் அமெரிக்கத் துருப்புகள் கடும் யுத்தத்தில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை கிரனடாமீது அமெரிக்கா மேற்கொண்ட படையெடுப்பை பிரிட்டன் நியாயமானதாகக் கருதவில்லை என்று அந்நாட்டின் வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

கியூபா, ரஷ்யத் துருப்புகள் கிரனடாவில் இருப்பதனுல் அங்கு படையெடுப்பை மேற்கொள்வதாக அமெரிக்கா தெரிவிக்கும் கருத்தை ஏற்க முடியாதென்றும் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

கிரனடாவிற்கு பொதுநல அமைப்புநாடுகளின் அமைதி காக்கும் படையை அனுப்புவதற்கான முயற்சிகள் லண்டனில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வெ)

## ஆர்ப்பாட்ட ஊர்வலம்

டாக்கா, அக். 31

பங்களாதேஷில் பொதுத் தேர்தலை நடத்தக்கோரி அந்நாட்டின் இராணுவ அரசாங்கத்திற்கெதிராக சுமார் 2000 மாணவர்களும். எதிர்க்கட்சித் தலைவர்களும் நேற்று டாக்காவில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர்.

## பாகிஸ்தானில் மனிதஉரிமை மீறல்

இஸ்லாமாபாத், அக். 31

பாகிஸ்தானில் மனித உரிமைகள் மீறப்பட்டதை சர்வதேச மனித உரிமைகள் ஸ்தாபனம் கண்டித்துள்ளது.

இதுதொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் கமிட்டி பாகிஸ்தான் ஜனதிபதிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளது.

அக் கடிதத்தில் பாகிஸ்தானில் 2,000 அரசியல் கைதிகள் எவ்வித விசாரணையுமின்றி சிறையில் வைக்கப்பட்டிருப்பதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (வெ)

## அனல்மின் நிலையத்தில் தீ விபத்து!

புதுடில்லி அக். 31

உத்தர பிரதேசத்திலுள்ள அனல்மின் நிலையத்தில் நேற்று பெரும் தீ விபத்தொன்று ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இத் தீ விபத்துக்கான காரணம் பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை. (வெ)

## எம். ஜி. ஆருக்கு டாக்டர் பட்டம்

சென்னை, அக். 31

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் சத்துணவுத் திட்டம், ஏழைகளுக்கான கல்வித் திட்டம், வேலைவாய்ப்புத்திட்டம் ஆகியவற்றைப் பாராட்டி, சென்னைப் பல்கலைக்கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிகௌரவித்தது.

இவ் வைபவத்தில் தமிழ்நாடு ஆளுநர் திரு. எஸ். எல்.குரானு, நிதியமைச்சர் திரு. இரா.நெடுஞ்செழியன், செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன், கேரள மாநில ஆளுநர் திரு. இராமச்சந்திரன் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டு முதலமைச்சரின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்கள். (வெ)

## "சகல கலைகளையும் விட சிவக்கலை அற்புதமானது"

(யாழ்ப்பாணம்)

''சிவக்கலை என்பது பொய்யான மனஇந்திரிய உணர்ச்சிகளினுல் விருத்தியடையும் சகல கலைகளையும்விட அற்புதமானது. பிறகலைகளில் மதிமயங்கி இரவு பகலாக விழித்திருந்து தவம்செய்யும் இச்சையுள்ளவர்களுக்கு சிவபெருமான் காட்சிகொடுக்கமாட்டார்''

இவ்வாறு யாழ். கந்தர் மடத்திலுள்ள ஸ்ரீசிவகுருநாதர் குருபீட வேதாந்தமடத்தில் நடைபெற்ற சமயக் கருத்தரங்கில் உரையாற்றிய சைவ சித்தாந்தச் செம்மல் நா. செல்லப்பா கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''மணிவாசகர் கண்ணின்றி கண்டறியாததைக் கண்டார். காதின்றி கேட்டறியாததைக் கேட்டார். இவ்வாறு செயற்படும் சக்தியை அவர் சிவக்கலை மூலமே பெற்றுர். சிவக்கலைக்கு வேண்டியவழி உண்மைவிளக்கமாகும்.

''தீட்சை என்பது வெறும் வேடமன்று அது பாசத்தைத் தீர்த்துக்கட்டும் சாதனமாகும். சார்பு நிலையிலுள்ள ஆன்மா மலச்சார்பு நீங்கி சுதந்திரம் பெறுதல்வேண்டும்'' என்றுர். (வெ

## ஏழாம் கட்ட உணவு பொருள் வழங்கப்படுமா?

(யாழ்ப்பாணம்]

பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துவந்த அகதிகளுக்கு 7-ம் கட்ட உணவுப்பொருட்கள் வழங்கப்படுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

7-ம் கட்ட உணவு பொருட்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு இதுவரை மேலிடத்திலிருந்து எந்த தகவலும் கிடைக்கவில்லை என சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் தெரிவித்தார்.

6-ம் கட்ட உணவுப்பொருட்கள் விநியோகம், இம்மாதம் 31-ம் திகதியுடன் முடிவடைகிறது.

5-ம், 6-ம் கட்ட உணவு பொருட்கள், அரச, கூட்டுத்தாபன, வர்த்தக ஊழியர்களுக்கு நிறுத்தப்பட்டு சுயதொழில் பார்த்தவர்களுக்கும் மாணவர்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டது.

இவர்களுக்கு 7-ம் கட்ட உணவு பொருட்கள் வழங்குவதுபற்றி எவ்வித நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவில்லையாம். [க]

## ஸாம்பியா ஜனதிபதியாக கௌண்டா பதவியேற்பு

லுசாக்கா, அக். 31

ஸாம்பியாவின் ஜனதிபதியாக 5வது முறையாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட கெனத் கௌவுண்டா நேற்று பதவியேற்றுர்.

ஜனதிபதி தேர்தலில் 99 சதவீத வாக்குகளைப் பெற்ற திரு. கௌவுண்டா ஸாம்பியாவிற்கு 1964ம் ஆண்டு பிரிட்டனுல் சுதந்திரம் வழங்கப்பட்ட நாள் தொடக்கம் அந்நாட்டின் ஜனதிபதியாக இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

ஸாம்பியாவில் நீதி, பத்திரிகை, மத ஸ்தாபனங்களின் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கப்போவதாக திரு. கௌவுண்டா தெரிவித்துள்ளார். (வெ)

## இந். காங்கிரசுடன் இணைவதென்று தீர்மானம்

சென்னை அக். 31

காந்தி காமராஜ் தேசியகாங்கிரஸின் சேலம் மாவட்டப் பிரிவு இந்திரா காங்கிரசுடன் இணைவதென்று தீர்மானித்துள்ளது. (வெ)

## "தூயமனத்துடன் கருமமாற்ற வேண்டும்"

(கிளிநொச்சி)

''பொதுப்பணியில் ஈடுபடுவோர் தூயமனத்துடன் கருமமாற்ற முன் வரவேண்டும்'' என்று சாவகச்சேரி சித்திவினயகர் தேசிய இளைஞர்மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கலைவாணி விழாவின் போது பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் எழுத்தாளரும் கவிஞருமான செவ்வந்தி மகாலிங்கம் குறிப்பிட்டார்.

கவிஞர் செவ்வந்தி மகாலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- ''தமிழ்மக்களிடம் உள்ள பாரம்பரிய மதக் கோட்பாடுகளும், கடவுள் நம்பிக்கைகளும் கலை கலாச்சாரங்களும் அருகிவருகின்ற காரணத்தாலே மனித குலத்தில் பீதியும் சமத்துவமும் இல்லாத நிலைமை உருவாகி வருகிறது.

''இறைவழிபாட்டின் மேல் இன்றைய இளைஞர்; யுவதிகள் நம்பிக்கை இழந்து காணப்படுவதனுல் அனேக துன்பங்களை அனுபவிக்கின்றனர். இறையருளை நம்வாழ்நாளில் ஒரு கணப்பொழுதிலேனும்சிந்திக்க தவறுதனுலே கொடியவினைகள் நம்மை வந்து சூழ்கிறன.

''இளைஞர்கள் இவற்றை எல்லாம் வீண்நாட்கள் என எண்ணி தம்மனம்போனபோக்கில் செல்வதை விடுத்து இறைவழிபாட்டில் ஈடுபட்டு நல்லவாழ்க்கை வாழவேண்டும்.

இவ்விழாவில் வைத்து தொழிலதிபர் வே.இராசதுரை இம்மன்ற வளர்ச்சிக்காக ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கினுர். இளைஞர் சேவை அலுவலர் செல்வி வ. விமலேஸ்வரி, மன்றத்தலைவர் திரு இ கதிரவேலு, வி. குலேந்திரன் ஆகியோரும் உரையாற்றினுர்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## ஆலய புனருத்தாரணம்

(ஊரெழு)

ஊரெழு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தில்புனருத்தாராண வேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால், அதற்கு முன்னேடியாக கடந்த புதன் கிழமை அங்கு பாலஸ்தாபன வைபவம் நடைபெற்றது. எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் வருடாந்த மகோற்சவத்திற்கு முன்னர் புனருத்தாரண வேலைகள் முடிவடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அம்புலன்ஸ் வண்டி இன்றி நோயாளர் கஷ்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரசினர் ஆஸ்பத்திரியின் ஒரே ஒரு அம்புலன்ஸ் வண்டியும் ஓடமுடியாதவகையில் பழுதடைந்துவிட்டது.

இதனுல் யாழ். ஆஸ்பத்திரிக்குஎடுத்துச்செல்லப்படவேண்டிய அவசர நோயாளிகள் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

அம்புலன்ஸ் வண்டி கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு இல்லாமையால் நோயாளர்கள் அநேக கஷ்டங்களை அனுபவிக்கின்றனர்.

அம்புலன்ஸ் வண்டி ஒன்றை அனுப்பி வைக்குமாறுகோரும் அவசரத்தந்தியொன்றினை கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி அபிவிருத்திசபையினர் சார்பில் அதன் தலைவர் டாக்டர் கே வி. கே. திருலோகமூர்த்தி சிகாதார அமைச்சர் ரஞ்சித் அத்தபத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

## இந்திய-சீன எல்லைப்பிரச்னை இணக்கம் காணப்படவில்லை

புதுடில்லி, அக். 31

இந்திய - சீன எல்லைப் பிரச்னையில் இரு நாட்டுப் பிரதிநிதிகளுக்குமிடையே நிலவிய கருத்து வேறுபாட்டினுல் இணக்கம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்திய - சீன எல்லைப் பிரச்னை தொடர்பான பேச்சுக்கள் இரு நாட்டுப் பிரதிநிதிகளுக்குமிடையே நான்காவது தடவையாக நேற்று நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தைகளில் சீனவின் சார்பில் சீன வெளிநாட்டமைச்சர் தலைமையிலான பிரதிநிதிகள்குழு கலந்து கொண்டது.

இந்தியக் குழுவிற்கு வெளிநாட்டமைச்சின் செயலாளர் திரு. வாஜ்பாய் தலைமை தாங்கினுர். [வெ]

## கவாஸ்கருக்கு இந்திய ஜனதிபதி பாராட்டு

புதுடில்லி, அக். 31

இந்தியாவுக்கும் மேற்கிந்திய தீவுகளுக்குமிடையே புதுடில்லியில் நடைபெற்றுவரும் 2வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் 29வது செஞ்சரியை அடித்து, முன்னுள் அவுஸ்திரேலிய கிரிகெட் வீரர் டொன் பிரட்மனின் உலக சாதனைக்கு சமமான உலக சாதனையை நிலைநாட்டிய இந்தியாவின் பிரபலகிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கருக்கு இந்திய ஜனதிபதி திரு. ஸெயில்சிங் பாராட்டுத் தெரிவித்துள்ளார். (வெ)

## லெபனுன் பிரச்னை: ஜெனிவாவில் விசேட மாநாடு

(ஜெனிவா)

லெபனுன் பிரச்னை பற்றி ஆராய்வதற்கான விசேட மகாநாடு இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

லெபனுன் பிரச்னையுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

லெபனுன் பிரதம மந்திரி ஜமாயில் மகாநாட்டில் கலந்துகொள்ளும்பொருட்டு ஜெனிவா சென்றுள்ளார்.

லெபனுனில் தற்போது நிலவிவரும் கொந்தளிப்பிற்குத் தீர்வுகாண இம்மகாநாடு வழிவகுக்குமென்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

லெபனுனில் கிறிஸ்தவ சமூகத்திற்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படும் உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட வேண்டுமென்று அங்குள்ள இடதுசாரிகள் லெபனுன் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்;

லெபனுனின் அரசியல் விவகாரங்களிலும் தமக்குக் கணிசமான பங்களிப்பு வழங்கப்படவேண்டுமென்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (வெ)

### மணிவாக்கு

ஒவ்வொரு மனிதனும் ஓரளவிற்கு ஏதோ ஒரு விடயத்தில் பித்துப்பிடித்தவனே!

— ப்ரான்சிஸ்பேக்கன்.

## நமது நோக்கு

# 'மனிதா, கொல்லாதே'

ஆடு, மாடு மற்றும் கால்நடைகள் இறைச்சிக்காகக் கொல்லப்படுவதைத் தடுக்க இவற்றிற்கு ஏற்றுமதித் தடைச்சட்டம் அரசாங்கத்தால் அண்மையில் இறுக்கப்பட்டுள்ளது.

இவ்வித தடைகளைத் தாண்டி சபட காரணம் காட்டி கடந்த காலத்தில் இவை வேற்று நாடுகளுக்கு அனுப்பப்பட்டது பலருக்குத் தெரியும்.

ஏற்றுமதித் தடைச்சட்டம் விழிப்புடன் செயற்படுத்தப்பட்டாலும் உயிரினத்தை உணவுக்கோ, மனிதனின் வேறெந்த தேவைக்கோ கொல்வது பௌத்த தர்மத்துக்கு நேர்மாறானதை நாம் நன்குணர நாட்டில் நல்ல சந்தர்ப்பம் நிலவுகின்றது.

''கருணையே மனித வாழ்வின் கிரீடம்'' என்று திருவாய்மலர்ந்தருளியவர் கௌதமபுத்தர்.

எங்கே எப்போதென்பது பௌத்த மக்களுக்குத் தெரிந்தாலும் எங்கள் வாசகர்கள் அவற்றை அறியாமலிருக்கலாம்.

புத்தபிரான் தம்முடைய சீடர்களுடன் ஏதோ ஓர் இடத்துக்கு யாத்திரை செய்யும்போது இயற்கை வனப்பையும் அங்குள்ள அழகான மரங்களில் பாடிக்கொண்டிருந்த பறவைகளையும் பார்த்து ''எத்தகைய விசுவாசத்துடன் இந்தப் பறவைகள் இந்த அமைதியான அழகான சுற்றுடலில் சூரியனை நோக்கிப் பாடுகின்றன. மனிதனே இவற்றைக் கொல்வதில், இவற்றின் இரத்தத்தைச் சிந்துவதில் இன்பம் காண்கின்றான்'' என்று விசனித்தாராம்.

அதேசமயம் ஒரு ஆட்டிடையன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு போவதைக் கண்ட புத்தபிரான் அவனுடன் உரையாடியபோது, ஒரு குட்டி ஆடு நடக்க இயலாததால் தான் தாமதிக்கவேண்டியிருக்கிறது'' என்று கவலைகொண்டிருந்ததை அறிந்தாராம்.

உடனே அந்தக் குட்டியைத் தம் தோழிலே போட்டுக்கொண்டு எட்டி நடந்த பகவான், ஆடுகள் அரசன் முன்னிலையில் பலியிடுவதற்காகப் போனதை அறிந்தார்.

இந்தப் பலியீட்டு வைபவம ஆரம்பமானதும் ஒரு குறிப்பிட்ட ஆட்டின் கழுத்தில் கத்திவிழும் சமயத்தில் கௌதமர் தமது தலையைக் கொடுத்தாராம்.

''நானே அந்தஉயிருக்குப் பதிலாக பலியாக முன்வருகிறேன்'' என்று சொல்லியதும், அரசன் மனம் நெகிழ்ந்தான், அங்கு கூடியிருந்த மக்கள் அதிசயப்பட்டார்கள், அவர்களுக்கு கருணைமூர்த்தியாகிய புத்தபிரான் அருளுரை வழங்கவேண்டுமென்று பணிவுடன் அரசன் கேட்டானாம்.

அன்று அங்கு புத்தபிரான் நிகழ்த்திய போதனையே இன்று இலங்கை உட்பட உலகெங்கும் தார்மீகமென்ற தலைப்பில் போதிக்கப்படுகின்றது.

''மனிதா, உயிரை நீ இலகுவில் எடுக்கலாம்; ஆனால் உங்களில் எவரும் உயிரைக்கொடுக்க முடியாதென்பதை மறந்துவிடலாகாது''

''கருணையே உலகத்தைக் சிறக்க வைக்கின்றது; எனவே இரத்தம் தவிர்ந்த உணவை உண்ண உறுதி கொள்ளுங்கள்'' என்பதே போதனையின் உள்ளுடன்.

அடுத்தநாள் அந்த அரசன் பலிக்கோ அல்லது வேறெந்த தனிப்பட்ட காரணத்துக்கோ உயிர்க்கொலை அனுமதிக்கப்படாதென்று சட்டத்தால் நிறுத்தினான் என்பது கதை.

கொலையை எல்லா மதங்களும் தவிர்த்திருக்கின்றன. இருப்பினும் புத்தபிரானின் போதனைஉலக சமூகத்தை விசேடமாகக் கவர்ந்திருக்கிறது.

இரகசியமாக மாமிசபோசனம் உண்ணும் இந்துக்கள் உண்டென்று அறிந்த புத்தபிரான் அதனை அகற்ற முனைந்தாரென்றும், குறிப்பாகத் தமிழ்நாட்டிலே அவருடைய சாதனை பெருமளவிற்கு வெற்றிபெற்றதென்றும் கருதப்படுகிறது.

உயிர்க் கொலையைக் கண்டித்த புத்தபிரான் மனித கொலையை எவ்வாறு கருதுவார். இதனை உணரமுடியாத எங்கள் நாடு எவ்வகையிலும் பெருமிதம்கொள்ள இடமில்லை. இந்த நாட்டின் கலாசாரம் பௌத்த கலாசாரம் என்று உலகமே மதித்து வந்திருக்கிறது. உணவுக்கோ, அல்லது வேறெந்தக் காரணத்துக்கோ-குறிப்பாக குரோதத்தின் மேலீட்டால் ஒரு மனிதன் இன்னொரு மனிதனை இனவேறுபாடு காரணமாகக் கொலைசெய்தல், ஒன்றல்ல நூற்றுக்கணக்கில் இடம்பெறுமாயின் எங்கள் பௌத்த கலாசாரம் எம்மட்டில்?

ஒன்று சொல்லவேண்டும்: ராஜாங்க அமைச்சர் அண்மையில் குறிப்பிட்டது முற்றிலும் சரி. ''இந்தநாட்டில் பௌத்தமக்கள் பெரும்பான்மையாரென்பதால் கடந்த கலவரம், விரைவில் அடங்கிவிட்டது''

இவ்வித கலவரம் இனிமேல் நடைபெறுதிருக்கும் பொறுப்பும் அம்மக்களைச் சார்ந்ததே என்பது எமது பணிவான கருத்து.

# அகதிகளுக்கான புனர்வாழ்வுத் திட்டம்!

## சில யோசனைகள்

**சி. எஸ். சுப்பிரமணியம்**

மலையும் ஆறுமில்லாது இயற்கையாற் பாதிக்கப்பட்டு மனிதனுடைய விடாமுயற்சியினால் எதுவுளதோ அதைச் சரியான முறையிற் பயன்படுத்தி தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவிட வேண்டும் என்ற பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வாழ்கின்ற பகுதியில் மிக முக்கியமான தொழில் கல்வி பயில்தலாகவிருந்து வருகின்றது. எனவே கற்றலுக்குரிய வசதிகளை ஏற்படுத்தி ஆற்றலுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு தொழில் நுட்பப் பயிற்சிகளைச் சிறந்த முறையில் பெற்று சமுதாய வளர்ச்சிக்கும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஆக்க பூர்வமான முறையில் உதவக்கூடிய இளைஞர்களை உருவாக்க பரந்த மனப்பான்மையுடன் நாட்டுப் பற்றுடன் விசுவாசத்துடன் திட்டமிட்டு செயற்படுத்தக் கூடிய தலைவர்களும் கல்விமான்களும் முன்வரவேண்டும்.

நாட்டின் புவியியற் தன்மையை ஆராய்ந்து மேற்கொள்ளக்கூடிய விவசாய அபிவிருத்தியையும் முழுமையாக செயற்படுத்தக் கூடிய தொழில் அபிவிருத்திக்குரிய திட்டங்களை வகுத்து பொருளாதார முன்னேற்றத்திற்குரிய முறையில் செயல்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். சந்தைப்படுத்தக்கூடிய வசதிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளக்கூடிய சிறுகுடிசைத் தொழில் நிலையங்களை ஏற்ற இடங்களில் அமைக்க வேண்டும். நீரைத்தேக்கி நீர்ப்பாசனத்துக்கு பெருப்பித்து ஆழமாக கிடைக்கக்கூடிய நிலங்கள் அனைத்திலும் தீவிர விவசாயத்தை மேற்கொள்ளவும் கூட்டுறவு கோழிப்பண்ணைகளையும் பால் பண்ணைகளையும் அமைக்கவும் கனிமரவகைகளை வளர்க்கவும் பொருளாதார பயனளிக்கும் மரக்கன்று வகைகளை முடியுமான சகல இடங்களிலும் உண்டாக்கவும் தொழில் நுட்பப்பாடசாலைகளையும் தொழில் பாடசாலைகளையும் நிறுவவும் அவ்வத் துறையில் பயிற்சி பெற்ற நிபுணர்களைக் கொண்டகுழு மக்களுடைய பூரண ஒத்துழைப்புடன் செயற்படுத்தக் கூடிய திட்டத்தை வகுக்க வேண்டும்.

தொழில் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றத்தின் அத்திவாரமாகவுள்ளது. எனவே கல்வி பயின்று தொழிலற்ற வாலிபர்கள் அனைவரையும் ஊக்கப்படுத்தி அவர்களுடைய ஆற்றலுக்கும் விருப்பத்திற்கும் தேவைகளுக்குமுரிய தொழில் நுட்பக்கல்லூரிகளை ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் கூட்டுறவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கி அவர்களை ஊக்கப்படுத்தி ஒழுங்கான முறையில் தொழில் அறிவைப் பெறுவதற்கு திட்டமிடுவது சேவைமனப்பான்மையுள்ள தலைவர்களின் கடமையாகும்.

சகல மக்களும் தங்களுடைய அறிவு, ஆற்றல், அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு ஓய்வு நேரத்தில் ஈடுபடவும சுயதொழிலாகக் கொள்ளவும் நிரந்தர தொழிலீடுபடவும், தொழிலற்ற பிரச்னையை ஒழிக்கவும், பின்வரும் தொழிற்பயிற்சி நெறிகள் பொருத்தமானவை. ஆனால் பயிற்சிபெறுவதற்குரிய வசதியான இடங்களும் பயிற்சியளிக்கக்கூடிய சேவை மனப்பான்மையுள்ள அபிவிருத்தித்திட்டங்களை வகுக்கக் கூடிய விரிவுரையாளர்களும் மிகவும் முக்கியமானவை.

### விவசாயம்

பயிர் நாற்றிடல் - உணவுப் பயிர்கள், சிறிய ஏற்றுமதிப் பயிர்கள், பழப்பயிர்ச்செய்கை, வரட்சி மண்டலப் பயிர்கள்' தென்னைச்செய்கை, பூ செய்கை முந்திரியப் பயிர்ச்செய்கை.

### கட்டிடத்தொழில்

தச்சுவேலை, மேசன் வேலை, வீட்டு மின் பொருத்தல், மின்னொட்டு வேலை, பைப் வேலை, பூச்சு வேலையும் மினுக்கலும், திட்டப்படம் வரைதல், டிங்கர் வேலை, உள்வீட்டு அலங்காரம்.

### வர்த்தகம்

தட்டச்சு, கணக்கியல், தொழில் நிர்வாகம்.

### பாரம்பரிய கைத்தொழில்

பனையோலை, மரப்பட்டை, நார் ஆகியவற்றைக் கொண்டு செய்யும் தொழில், நகை ஆபரண வேலை, வெங்கல வேலை, மரத்தில் சித்திரவேலை, தும்புத்தொழில்.

### தொழில்கள்

மரத்தளபாடம் செய்தல், விவசாய உபகரணம் செய்தல், உடை தைத்தல், பின்னல் வேலை, தையல், வெட்டு வேலை பூ வேலைப்பாடு, தோல்வேலை, இறப்பர் தொழில்.

### கால்நடைத் தொழில்

கோழிப்பண்ணை, ஆடு, மாடு வளர்த்தல், தேனீ வளர்த்தல்.

### சேவைகள்

வானொலி உற்பத்தியும் பழுதுபார்த்தலும், தொலைக்காட்சி பழுதுபார்த்தல், மோட்டார் கார் இயந்திரம், வீட்டு மின் கருவிகளை இணைப்பு, பழுதுபார்த்தல், மரமரிதல், மீன்பிடி வள்ளம் திருத்தல், மீன்பிடி உபகரணம் திருத்தல், விவசாய உபகரணம் திருத்தல், துவிச்சக்கர வண்டி திருத்தல், புகைப்படம் எடுத்தல், புத்தகம் கட்டுதல், குளிரூட்டும் கருவி குளிர்சாதனப்பெட்டி திருத்தல், ஹோட்டல் தொழில், மோட்டார் வாகனம் செலுத்துதல், தொலைபேசி, அச்சு வேலை.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு தொழில் நுட்பக் கல்லூரியை ஸ்தாபித்து அவ்வப்பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கக் கூடிய முறையில் ஒழுங்கு செய்வதால் பல பிரச்னைகளை விடுவிக்கலாம்.

பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் ஏற்ற திட்டங்களை வகுத்துபொருத்தமான இடங்களில் கல்லூரிகளையும், பயிற்சி நிலையங்களையும் நிறுவி கூட்டுறவுக் கல்வி, விவசாயக் கல்வி, வர்த்தகக் கல்வி, சமயகலாச்சாரக் கல்வி, சுகாதாரக்கல்வி, சனத்தொகைக் கல்வி, உணவுப் போசாக்குக் கல்வி. சுற்றாடல் கல்வி ஆகியவற்றைப் போதிக்கக் கூடிய வழிகளைஏற்படுத்தலாம்.

மக்கள்வாழும் பிரதேசங்கள் எல்லாத்துறைகளிலும் முன்னேறுவதற்கான திட்டங்கள் பின்வருமாறு:-

(5ம் பக்கம் பார்க்க)

## சிந்தியுங்கள் இளைஞர்களே!

### ஆசிரிய விருத்தம்

செந்தமிழர் சீரழிந்தார்! தேட்டம் எல்லாம்
தென்னிலங்கைக் குண்டர் கையில்! சும்மா வந்தார்!
நொந்துள்ளம் வருந்துகின்றார்! இந்தவேளை
நோவின்மேல் நோ செய்தல் நீதியாமோ?
சிந்தியுங்கள் இளைஞர்களே! ஈழத் தாய்மார்
தெய்வமடா! தாலியையும் பறிக்கின்றீரே!
வெந்தபுண்ணில் வேல்நுழைத்தல் வேண்டாம்! வேண்டாம்!
வெறுத்திடுவீர் களவுதனை! ஒறுக்கும் தெய்வம்!

—வித்துவான் சி. ஆறுமுகம்

## மக்கள் கருத்து

# ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம்

இப்பொழுது யாழ்ப்பாணக் கல்விப் பகுதியார் G. C. E வகுப்புக்களில் படிக்கும் மாணவருக்கு அவர்களுக்குரிய தமிழ்ப் பாடத்திட்டப்படி ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க ஆதரவில் ஒரு பரீட்சையை நடாத்துவதற்கு திட்டமிட்டிருக்கிறார்கள் என்று அறிகின்றோம். இம்முயற்சி வரவேற்கத்தகததாயினும் சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு போதியதன்று. சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் உயர்கல்வியைப் வளர்ப்பதே இதன் நோக்கமாகும். இதன் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு மூன்று தரத்தில் பயிற்சிகள் நடாத்தியது. அவையாவன; பிரவேசம். பாலபண்டிதம், பண்டிதம் என்பன. இவை சமஸ்கிருதத்திலும் தமிழிலும் நடாத்தப்பட்டன. இப்பரீட்சைகளிற் தோற்றுவோருக்கு உதவிபுரிவதற்காக யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் வகுப்புகள் நடாத்தப்பட்டன.

ஆசிரியர்களை இப்பரீட்சை எடுக்க ஊக்கப்படுத்தற் பொருட்டு பண்டித பரீட்சை சித்தி எய்திய ஆசிரியர்களுக்கு விசேடப்படி கொடுக்கப்பட்ட ஒரு காலத்தில் பண்டிதர்கள் வித்துவான்கள் முதலியோரை சம்பள விஷயத்தில் பட்டதாரிகளுக்கு சமமாகக் கருதப்பட வேண்டுமென்று கிளர்ச்சி நடைபெற்றது.

பண்டிதர்கள் ஆங்கிலக் கல்லூரிகளிலும் ஆசிரியர்களாய் இருந்து மேல் வகுப்புகளுக்கு தமிழையும் சைவத்தையும் சிறப்பாகப் போதித்து இப்பாடங்களில் மாணவர் சிறந்த தேர்ச்சி அடையச் செய்தனர்.

இப்பொழுது பண்டிதர்களை கல்லூரிகளில் காண முடியாமல் இருக்கிறது. இதற்குக் காரணம பண்டித பரீட்சையை ஒழுங்காய் நடாத்தாமையும், பண்டிதர்களுக்கு முன்பு கொடுக்கப்பட்ட விசேடபடி நிறுத்தப்பட்டமையுமாம். பிந்தியதே முக்கிய காரணமாகும். தமிழை வளர்க்க வேண்டுமாயின் இந்த விசேடபடியை மறுபடியும்கொண்டுவரவேண்டும். இதனால் உந்தப்பட்டு பலர் பண்டிதர் ஆவார்கள்.

—ச. அம்பிகைபாகன்

# வடமுனை [6]

**"மலைகளிலிருந்து ஊற்றெடுக்கும் மகாவலி மிகவும் தாராளமாகவேஓடுகிறது. அதனிடம், இனவாதம், பிரிவினைவாதம், மதவாதம் அறவே இல்லை. ஆட்சியாளரும்அதன்நிலைக்கு உயர வேண்டும்.**

**ஒரு சிலரின் கெடுபிடிகளுக்கு அவர்கள் ஆளாகக்கூடாது. இந்நாட்டுப் பிரஜைகளை கண்கலங்காது பாதுகாப்பதே அவர்கள் பணி!"**

அரச அதிபர் திரு. அந்தோனிமுத்துவைத் தொடர்ந்து வடமுனைக்கதையில் அறிமுகப்படுத்துவதற்கு இன்னுமொரு அன்பர் இருக்கிறார். நண்பர் துரைரத்தினம் அவரைச்சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

திரு. எஸ். மரியசிங்கம் என்பவரேஅவர். வடமுனைகுறித்து மட்டக்களப்பு பொதுமக்கள் சிலரைச்சந்தித்து அவர்களின் கருத்துக்களை அறியலாமென்றே முதலில் எண்ணியிருந்தேன்.

ஆனால் திரு. மரியசிங்கத்தின் அறிமுகம்,மட்டக்களப்பு வாசிகளின் வடமுனை நிலை குறித்த கருத்துக்களை ஒருமித்துத் தருவதாகவே இருந்தது. இன்னும் கூறப்போனால் வடமுனை அத்துமீறலின் தாக்கத்தை முழுமையாக உணர்ந்த ஒருவராகவே அவர் காணப்பட்டார்.

திரு. மரியசிங்கம் ஒருபொறியியலாளர். மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக்கொண்டவர். மதுறுஓயா திட்டப்பகுதியிலும் நெடுநாள்பணிபுரிந்தவர். எனவே அத்திட்டப்பகுதியிலேயே அடங்கும் சர்ச்சைக்குரிய வடமுனைபற்றி நன்கு அறிந்துவைத்திருந்தார்.

அவரது இல்லம் சென்றதும் நான் வந்திருக்கும் நோக்கத்தை நண்பர் துரைரத்தினம் அரிடம் தெரிவித்தபோது பெரும் மகிழ்ச்சியடைந்தார். எம்மை அமரச் சொன்னபின் வடமுனைபற்றி தாம் தொகுத்து வைத்திருப்பவற்றை எடுக்க உள்ளேசென்றார்.

## ஹாலின் நடுவே வரைபடம்

அவரது ஹாலின் நடுவே பெரியதொரு வரைபடம் (Map) தொங்கிக்கொண்டிருந்தது. அதில் வடமுனைப் பிரதேசத்தைதெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டும் குறியீடுகள்!

"என்னிடம்வருபவர்களுக்கு வடமுனை பற்றி விளக்குவதிலேயே காலங்கழிந்துவிடுகிறது ஆனால் இன்று உங்களுக்கு நான் தரவிருக்கும் விளக்கமே பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன்." என்று திரு. மரியசிங்கம் கூறினார். வடமுனைவிவகாரம் என்றதும் தான் தாமதாம், கேள்வி கேட்க இடமில்லாமல் ஏதோ 'புரொஜெக்டரி'ல் படம் போட்டுக் காட்டுவது போல் அவ் விவகாரத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டினர்.

திரு. மரியசிங்கத்தின் வடமுனை விவகார விரிவுரை ஆரம்பமானது; "மதுறு ஓயா திட்டம் தமக்குப் பெரும் பயனளிக்குமென்றே கல்குடா, மட்டக்களப்புமக்கள்நம்பினா. ஆனால் வடமுனை அத்துமீறல் அவர்களது நம்பிக்கைகளை தவிடு பொடியாக்குவதாகவே அமைந்துவிட்டது.

## மதுறு ஓயா நீர்ப்பாசனத் திட்டம்

கல்குடாத் தொகுதியில் அடங்கும் மகாவலித்திட்டத்தின் மதுறு ஓயா நீர்ப்பாசன திட்டப்பகுதி, பிரிவு-பி (System-B)என்பதாகும். இத்திட்டம் பொலநறுவ தொகுதியையும், கல்குடாதொகுதியையும் உள்ளடக்கிய 1 லட்சத்து 25ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கொண்டது.

இதில் 71,500 ஏக்கர் பொலநறுவ பகுதியில் வருகிறது. மிகுதி 53,590 ஏக்கர் பகுதியே கல்குடா தமிழ்ப்பகுதியில் அடங்குகிறது.

இதன்படிபொலன்னறுவைப் பகுதியிலடங்கும் 71,500 ஏக்கரில், 20,000 சிங்கள மக்களை குடியமர்த்துதல், கல்குடாப் பகுதியில் இருக்கும் மிகுதி 53,500 ஏக்கரில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களை குடியமர்த்துதல், இதுவே மகாவலி அதிகார சபை அறிக்கையின்படியுள்ள ஏற்பாடு.

ஆனால் தற்போது நடந்திருப்பதோ இந்த ஏற்பாட்டிற்கு முற்றிலும் முரணான நடவடிக்கையாகும்.

தமிழ்ப் பகுதியான கல்குடாத் தொகுதியில் வரும் மதுறுஓயாத் திட்டத்தின் 53 ஆயிரம் ஏக்கரிலுள்ள வடமுனைப் பகுதி, அது சேரவேண்டியவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. ஒரு பௌத்த பிக்கு தலைமையில் இப்பகுதியை ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் அத்துமீறி ஆக்கிரமித்துள்ளனர்.

## மிகவேதனை தருவது

இதில் இன்னும் வேதனையளிப்பதென்னவெனில், வடமுனைப் பகுதியில் அத்துமீறியமை, அரசாங்கக் காடுகளை அழித்தமை போன்ற சட்ட விரோதமானவையென்று கருதப்படுபவற்றையும் அரசாங்க திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றியதேயாகும்.

வடமுனையில் செப்டம்பர் மாத ஆரம்பத்தில் திடீர்அத்துமீறலுக்குப் பெருமளவில் மகாவலி அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பாதை அமைக்கும் இயந்திரங்கள், லொறிகள், ஜீப் வண்டிகள், ஜெனரேட்டர்கள் என்பன மனம் போனபடி பாவிக்கப்பட்டன.

வடமுனை மட்டக்களப்பில் உள்ளதா? அல்லது பொலன்நறுவையில் உள்ளதா? என்று சந்தேகம் ஏற்படும் அளவுக்கு பொலன்நறுவையில் உள்ள அரச திணைக்களங்கள் அங்கு இயங்கின" என்றார்.

## பாயவேண்டும் அல்லது பறக்கவேண்டும்

திரு. மரியசிங்கம் மேலும் ஒன்றையும் மிகுந்த கவலையுடன் கூறினார்.

"மட்டக்களப்பின் தெற்கு அந்தத்தில் அம்பாறை மாவட்டம் அமைந்துள்ளது. வடக்கிலேயே கல்குடாத் தொகுதிஒரு தமிழ்ப் பகுதியாகஇருந்து புவியியல் ரீதியாக ஒரு நீண்ட தமிழ்ப் பிரதேசத்தை இணைக்கிறது. வடமுனை அத்துமீறல் முறியடிக்கப்படாவிட்டால் அத்தொகுதியும் நாளடைவில் தமிழ் மணத்தை இழந்துவிடும். இந்நிலையில்..., கடவுளே நடந்துவிடக் கூடாது. ஜூலை பயங்கரம்போல் மீண்டும் ஒன்று தோன்றினால்... ஒன்று மட்டக்களப்புப் பகுதி மக்கள் வங்காள விரிகுடாவினுள் பாயவேண்டும். அல்லது இறைவன் துணையால் வடக்கு நோக்கி வான்மீது பறக்க வேண்டும்" என்று தமது நீண்ட விரிவுரையைத் தம் வரைபடம் முன் நின்று ஒரு பேராசிரியர்போல் நிறைவு செய்தார்.

## உருப்படியான வேலை

அரசியல்வாதிகள் போல் வெறும் வாய்ப் பேச்சால் திரு மரியசிங்கம் தமது உள்ளக்கிடக்கையை வெளியிடவில்லை. தம்மால் வடமுனை அநீதியைத் தடுக்க உருப்படியாக ஏதாவது ஆகவேண்டுமென்று கடுமையாக உழைக்கிறார்.

அவ்வுழைப்பின் ஒரு அம்சமாக ஆங்கிலத்தில் அழகிய சிறு நூல் ஒன்றையே அவர் தயாரித்துள்ளார். அந்நூலின் சிறப்பம்சமென்னவெனில், தட்டச்சுமூலம் விபரமான வரைபடங்களுடன் அவர் கல்குடா, வடமுனையெல்லாம ஒரு தமிழ்ப் பகுதியே என்று வரலாற்று, புவியியல் ரீதியாக நிரூபித்துள்ளார். பத்துப்பக்கங்களை மட்டுமே அது கொண்டுள்ளது.



வீட்டு ஹாலில் வடமுனை வரைபடத்தை தொங்கவிட்டு விளக்கமளிக்கும் அன்பர் மரியசிங்கம்

'UNFAIR INVASION OF KALKUDAH' Who is behind this Betrayal of trust?

—'கல்குடாவில் முறையற்ற ஆக்கிரமிப்பு, இவ் அநீதியான செயலுக்கு பின்னணி யார்?' என்பதே இச்சிறு ஆங்கில நூலின் தலையங்கமாகும். இந்நூலின் பிரதிகளை இலங்கையிலுள்ள தூதுவராலயங்களுக்கும், மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் அக்கறை கொண்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் அனுப்பப்போவதாக திரு. மரியசிங்கம் எம்மிடம் கூறினார்.

இந்நூலில் ஒன்றைப் பெற்றுக் கொண்டு, திரு. மரியசிங்கத்திடமிருந்து மிகுந்த நன்றியுணர்வுடன் விடைபெற்றோம். காரில் அதைத்திறந்து படிக்க முனைந்தேன். நண்பர் துரை, "இப்போ ஏன் அவசரப்படுகிறீர்?" எமது களைதீர நாளை பாசிக்குடாவில் முழு நாளையும் செலவிடுவதாக புரோகிராம். அப்போ அங்கு ஆற அமர்ந்து இதைப்புரட்டும்" என்றார்.

## கண்கள் சிமிட்ட மறுக்கின்றன

'பாசிக்குடா' - கல்குடாவினுள் இருக்கும் ரம்மியமான சிறு வளைகுடா. அழகிய வெண்மணல் பரப்பு. பத்துப் பக்கம் தானே குளிக்க முதல் பார்த்துவிடுவது என்று திரு. மரியசிங்கத்தின் அச்சிறுநூலை, அவ்வெண் மணல் மீதிருந்து புரட்டுகிறேன்.

இறுதிப்பக்கம், கடைசிப் பந்தி: "மலைகளிலிருந்து ஊற்றெடுக்கும் மகாவலி மிகவும் தாராளமாகவே பாய்ந்தோடுகிறது. அதனிடம் குறுகிய பிரிவினைவாதம், இனவாதம், மதவாதம் அறவேகிடையாது. குதூகலமாகவும், கலகலப்பாகவுமே அது ஓடுகிறது. அதன் நிலைக்கே ஆட்சியாளர்களும் உயரவேண்டும். ஒரு சிலரின் விருப்பு, வெறுப்புகளுக்கு ஆளாகாமல் இந்நாட்டின் சகல பிரஜைகளையும் கண் கலங்காது பாதுகாப்பதே அவர்கள் எதிரேயுள்ள தலையாய பணியாகும்".

இந்த வசனங்களில் நிலைத்திருந்த கண்கள் சில கணங்கள் சிமிட்டவேமறுக்கின்றன!

(முற்றும்) ★

பா. அனந்தகிருஷ்ணன்

## அகதிகளுக்கான-

(4ம் பக்கத் தொடர்ச்சி

நவீன நூல்நிலையங்கள் அமைத்தல், கிராமங்களில் வயது வந்தவர்கள் கல்வி நிலையங்கள் அமைத்தல், பின் தங்கிய பகுதிகளில் ஓய்வுநேரங்களை நல்ல முறையில் செலவிடவசதிஅமைத்தல், தேசிய விளையாட்டுகள் பயிலவும் நுண்கலைகள் பயிலவும் வசதிகள் அமைத்தல், கிராமப் புறங்களுக்கு போக்குவரத்து வசதிகள் அமைத்தல், சகல கிராமங்களுக்கும் மின்வசதி பொருத்தல், உயிர்வாயு உபயோகிக்கஊக்கமளித்தல், நல்ல வடிகால் முறை அமைத்தல் அவைகளை சீராக கவனித்தல், நவீன சந்தை அமைத்தல், எல்லாவசதிகளும் அமைந்த வைத்தியசாலைகள் அமைத்தல், சகல கிராமங்களிலும் இலவச மருந்து வசதி ஏற்படுத்தல், உல்லாசப் பிரயாணிகள் தங்க விடுதிகள் அமைத்தல்; அரங்குடனமைந்த விளையாட்டுமைதானம் அமைத்தல்,வேலையற்றிருக்கும் இளைஞருடைய புள்ளி விபரம் சேகரித்தல், பிச்சைக்காரர், சித்தசுவாதீனத்துறையில் பின் தங்கியோர், அங்கவீன முற்றோர், அனாதைகள் ஆகியோருக்கு புனரமைப்புத் திட்டங்கள் வகுத்துச் செயற்படுத்தல்,

பின்வரும் குழுக்கள் அமைக்கப்பட்டு தொழிற்படுதல்

1. தொழில் நுட்ப அறிவாளர் கல்விமான்கள் குழு.

2 விவசாயிகள் தொழிலதிபர்கள் குழு.

3. பொருளாதார நிபுணர்கள் கணக்காளர்கள் குழு

4. வியாபாரிகள் வர்த்தகர்கள் குழு.

ஒவ்வொரு இளைஞரும் வாழ்நாளை வீணாக்காது தானும் பயனடைந்து மற்றவர்களுக்கும் உதவக்கூடிய முறையில் சிக்கனமாகவும் கட்டுப்பாடாகவும் வாழக்கூடிய திட்டங்களை தனது ஆற்றலுக்கும் அறிவுக்கும் ஏற்ற முறையில் வகுத்து வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாகத் திகழ்வது தனது தலையாய கடமையாகும் என்பதை மனதிற் பதித்துக் கொளல்வேண்டும்.

## யாருடையது?

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் ஈழநாடு காரியாலயத்திற்குச் சமீபமாக கண்டெடுக்கப்பட்ட குடையொன்று ஒரு அன்பரால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

0 0 0

கோண்டாவிலைச் சேர்ந்த திரு. இ. குகேந்திரராசா என்பவர் நாச்சிமார் கோயிலடியில் கண்டு எடுத்த கார் உதிரிப்பாகமொன்றினை ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## நல்லை ஆதீனத்தில் ஸ்கந்த ஷஷ்டி விழா

இம்மாதம் 5ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும் ஸ்கந்த சஷ்டி ஆறுநாட்களிலும் நல்லை ஞானசம்பந்தராதீனத்தில் அருள்மொழி அரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள் "அருள் மணக்கும் அறுபடை வீடுகள்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்.

விரதம் அநுஷ்டிக்கும் அடியார்கள் ஆதீனத்தில் பாறனை செய்து கொள்ள வசதி செய்யப்படும். [ப]

வெளிநாடு செல்கிறீர்களா?
உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.
விபரங்கட்கு:-
த பிறவுன்ஸ் கம்பனி லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680
பிரயாணச்சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# "அகதிகளுக்கு காணிகள் வழங்க பிரஜாவுரிமை முட்டுக்கட்டை"

## யாழ். அரச அதிபர் கூறுகிறுர்

(மட்டுவில்)

''அகதிகள் முகாமில் உள்ள இந்த அகதிகளுக்கு காணிகள் வழங்கவேண்டும், வீடமைத்துக்கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு பிரஜா உரிமை ஒன்றே முட்டுக்கட்டையாக உள்ளது''

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கைதடி அகதிகள் முகாமில் நடைபெற்ற அகதிகள் கைப்பணிப் பொருட்காட்சியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் கூறினுர்.

அறவழி போராட்டக்குழுத் தலைவர் திரு. வி. எஸ். துரைராஜா தலைமையில் இப் பொருட்காட்சிஆரம்பமானது.

அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''நான் இந்த முகாமிற்குப் பல தடவைகள் வந்துள்ளேன். ஒவ்வொரு முறையும் வரும்போது, ஒவ்வொரு முன்னேற்றத்தையே காணுகிறேன். இப்படியான ஆற்றலும், கைவண்ணமும், திறமையும் கொண்டவர்கள் இந்த அகதிகள் என்று நான் கருதவில்லை. இவர்கள் பிரமாதமான பொருட்களைச் செய்திருக்கிறுர்கள். இவை மேல்நாட்டு உற்பத்திகளையே தோற்கடிக்கும்வகையில் உள்ளன'' என்ருர்.

கோப்பாய் முன்னுள் எம்.பி திரு. ஆலாலசுந்தரம் இப் பொருட்காட்சியில் பேசுகையில், ''இந்த முகாமில் உள்ளவர்கள் மட்டும் அகதிகள் அல்லர். இன்று இலங்கையில் தத்தம் வீடுகளில் வாழ்ந்தாலும் கூட ஒவ்வொரு தமிழனும் அகதிதான். இந்த நாட்டிலுள்ள தமிழனின் எதிர்காலம் எப்படி இருக்கிறதோ அதே எதிர்காலம் தான் உங்களுக்கும் உயிரைத் தவிர ஏனைய எல்லாவற்றையும் இழந்து இந்த முகாமிற்கு நீங்கள் வந்திருந்தாலும் உங்கள் திறமையை எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் ஆற்றலை மட்டும் இழக்கவில்லை என்பதை இக் கைப்பணிகள் எடுத்துக்காட்டுகின்றன'' என்று கூறினுர்.

இப்பொருட்காட்சியில் பிளாஸ்டிக், பனை ஓலை, துணி, தென்னை ஆகியவற்ருலான அலங்கார வீட்டு பாவனைப் பொருட்கள் பல்வேறு வகையில் அமைந்திருந்தன

சமூகசேவை அதிகாரி திரு. கே. கெங்காதரன் பனம்பொருள் அபிவிருத்தி நிபுணர் டாக்டர் கே. சபபந்தம் பேராசிரியர் நேசையா சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராஜா உட்பட பல பிரமுகர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். (ப)

---

## அகதிகளுக்கு கட்டுடை மக்களின் உதவி

(யாழ்ப்பாணம்)

கட்டுடை சனசமூக நிலையத்தின் சார்பில் கட்டுடை வாழ் மக்களிடமிருந்து திரட்டப்பட்ட 300 உணவுப் பார்சல்கள் குருநகர் அகதி முகாமில் தஞ்சமடைந்திருக்கும் மக்களுக்கு கட்டுடையூர் இளைஞர்களால் வழங்கப்பட்டது.

---

## ஜனுதிபதியை சந்திக்கவுள்ளனர்

(கொழும்பு)

இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தூதுக்குழுவினர் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவை விரைவில் சந்திக்கவுள்ளனர்.

இதுதொடர்பாக இக்கட்சியின் தலைவர் திரு. அஸிஸ் விடுத்துள்ள செய்தி ஒன்றில் இனப்பிரச்னைக்கு வட்டமேசை மகாநாடு மூலம்தான் தீர்வு காணமுடியும். இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு தமது கட்சி ஜனுதிபதிக்கு சகல உதவிகளும் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார். (சூ)

---

## நோயின் கொடுமை இளைஞர் தற்கொலை

(கரவெட்டி)

தொய்வுநோயின் கொடுமை தாங்கமுடியாத இளைஞர் ஒருவர் நஞ்சருந்தி உயிர்மாய்த்துக் கொண்டார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த நல்லையா கந்தசாமி (30வயது) என்பவரேஇவ்வாறுதற்கொலை செய்துகொண்டவராவர்.

---

## ஆசார்ய அபிஷேகம்



(சுழிபுரம்)

சுழிபுரம் பருளையம் பகுதியில் குரு பரம்பரையாக வாழ்ந்த வழித்தோன்றலாகிய சபாபதிக் குருக்கள் வைத்தீஸ்வர சர்மாவின் சிரேஷ்ட புத்திரன் நித்தியானந்த சர்மாவுக்கு பொன்னலை லட்சுமி பீட மண்டபத்தில்வைத்து ஆசார்ய அபிஷேகம் செய்யப்பட்டது. இந்த அபிஷேகம் நவாலியூர் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள், சர்வசாதகர் நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ சு. சுப்பிரமணியசாஸ்திரிகள் மற்றும் குருமார்களின்ஆசியுடன் நிறைவேறியது.

சிறப்புமிக்க குருபரம்பரையைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவுக்கு நடைபெற்ற ஆசார்ய அபிஷேகத்தைத் தொடர்ந்து அன்று பிற்பகல் ஸ்ரீ பொன்னலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் வரவேற்பு உபசரணையும் நடைபெற்றது.

---

# ரூ. 2 லட்சம் கொள்ளை: மட். மாஜிமாநகர உறுப்பினர் பிணையில் செல்ல அனுமதி

(மட்டக்களப்பு)

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பு மக்கள் வங்கி உதவி முகாமையாளர் வீட்டில் இடம் பெற்ற 2 லட்சம் ரூபா பெறுமதியான கொள்ளைச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்தது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மநாகர முன்னுள் உறுப்பினர் வே. மாணிக்கராசா உயர் நீதிமன்ற உத்தரவையடுத்து 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இக்கொள்ளை தொடர்பாக வே. மாணிக்கராசா உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். ஆனுல் அண்மையில் நடந்த மட்டக்களப்பு சிறை உடைப்புச்சம்பவத்தின் போது ஏனைய சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதால் இவர் மட்டுமே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. நிமால் திசநாயக்கா முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. கா. காசிநாதர் இவரைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரினுர். இதனையடுத்து உயர் நீதிமன்றத்தில் மனுச்செய்து பிணை பெறலாமென நீதிபதி தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து மாணிக்கராசா உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து பிணை அனுமதிபெற்றுள்ளார்.

---

# இன்றைய பலன்

ஐப்பசி 15-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(1-11-83)

மேடம்: கண்ணியமான காரியங்களை முடிப்பதில் வெற்றி காண்பீர்கள். சுற்ருடலில் செல்வாக்கு வளர்ச்சியடையும் காதல் சிட்டுகளுக்கு தேன் சொட்டும் பிதாவழிச் சுகமுண்டு.

இடபம்: மனம்போல் வாழ்வு மலரும் கடமையாற்றுமிடத்தில் சகல தொழிலாளர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும் சிலருக்குப் பதவி உயர்வுக்கும் இடமுண்டு. தெய்வநம்பிக்கையில் ஆர்வம் உண்டு.

மிதுனம்: கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும் இலட்ச்சிய நோக்குடன் இனசனக் கொண்டாட்டமும் உண்டு பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றம் தென்படும்.

கடகம்: எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும் நண்பர்கள் மூலம் ஏமாற்றம் அடைவீர்கள். கூட்டு வியாபாரத்தில் மோசடி நடக்கும் நன்ருகச் சிந்தித்து செயலாற்றவும்.

சிங்கம்: வாழ்க்கை மந்த நிலையில் நடைபெறும் எதிர்பாராத தடைகளில் முன்னேற்றம் பாதிக்கப்படலாம், சகோதரவழி மூலம் சஞ்சலமான செய்தியும் கிடைக்கலாம்.

கன்னி: அதிஷ்ட தேவதையின் அணைப்பில் உங்களுக்கு அதிஷ்டம் கிடைக்கலாம் திரைப்படத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகம் கூடும். செல்வாக்குடன் ஒருவரின் ஆதரவும் தப்பாமல் உண்டு:

துலாம்: விரக்திநிலை உருவாகும் வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக் கூடும் உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம் நன்கு சிந்தித்த பின் செயலாற்றவும்.

விருச்சிகம்: சிறப்பான சம்பவங்கள் இடம்பெறும் சீருடன் வாழ்வீர் வியாபாரத்துறையிலும் வாகனம் கொள்வனவு செய்வதிலும் லாபம் உண்டு வாழ்வில் வசந்தம் நிலவும்.

தனு: நல்லதைச் செய்வீர்கள நலன் பெருகும் பிரமுகர்கள் உங்களைத்தேடி வருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும் அரசியல்வாதிகள் உயர்ச்சி அடைவார்கள்.

மகரம்: எதிர்பாரத வகையில் பொருள் விரயமாகும் கொடுக்கல் வாங்கல்களினுல் பிணக்குகள் ஏற்படும் நண்பர்களைப் பகைத்துக்கொள்வீர்கள். வீணுனசிந்தனைக்கு இடம் கொடாது இருக்கவும்.

கும்பம்: களஸ்த்திர வழியால் நன்மைகள் வந்துசேரும் குடும்பத்தில் தென்றல் வீசும் கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பதில் காலத்தைக் கடத்துவீர் செலவுகள் கட்டுக்கடங்கியதாக இருக்கும்.

மீனம்: அதிக அலைச்சல் உங்களுக்கு எரிச்சலைத்தரலாம் தொழில்துறையில் வருமானம் மிகவும் மட்டமாகவே இருக்கும். ஆசைவார்த்தைகளில் மயங்கவேண்டாம்.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

---

## பதட்டநிலை

(பண்டத்தரிப்பு)

பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலனம் தொடர்பாக இரு கோஷ்டியினரிடையே ஏற்பட்ட தகராறு கடந்த சில தினங்களாக அப்பகுதியில் பெரும் பதட்ட நிலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஏழரை ஆண்டுகளாக பூசைகள் எதுவுமின்றி பூட்டப்பட்ட நிலையிலிருந்து வரும் இக்கோவிலின் முன்பக்கத்திலுள்ள இரும்புக் கேற்றுகள் அண்மையில் திருடப்பட்டுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. பின்னர் இக்கதவுகள் ஆலயத்திற்கு சமீபத்திலுள்ள வளவு ஒன்றில் போடப்பட்டிருந்ததை பொலிசார் கண்டுபிடித்தனர். இதனை அடுத்து அப்பகுதியிலுள்ள மூன்று பேரின் வீட்டு வேலிகளுக்கு தீ வைப்பு சம்பவம் நடைபெற்றதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. வீடொன்றின் முன்பாக நள்ளிரவு நேரத்தில் இனம் தெரியாதவர்களினுல் சீன வெடிகளும் கொளுத்திப் போடப்பட்டனவாம்.

இதே வேளை இனம் தெரியாத இளைஞர் கோஷ்டியொன்று ஆலயப் பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்களை நேரில் சந்தித்து பூட்டப்பட்டிருக்கும் ஆலயத்தை மீண்டும் திறந்து வழமைபோல் பூசைகள் நடைபெறச் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்ட ஒரு திகதியைக் கூறி காலக்கெடு விதித்தது என்றும் தங்கள் கட்டளையை நிறைவேற்ருது போனுல் அதனுல் விளையும் சம்பவங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பு என்று எச்சரித்து விட்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனுல் இப்பகுதியில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது.

---

## வேதாகம கண்காட்சி

(கரவெட்டி)

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் வேதாகம கண்காட்சி அடுத்த மாதம் 24ம், 25ம், 26ம் திகதிகளில் யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

---

## பரி.யோவான் கல்லூரியில் மரம்நடுகை

(அரியாலை)

சர்வதேச உணவு தினத்தையொட்டி மரம் நடும் இயக்கத்தை யாழ். பரி. யோவான் கல்லூரி அதிபர் திரு. ஸி. ஈ. ஆனந்தராஜன் கல்லூரி வளவில்மகோக்கனி மரமொன்றை நட்டு ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் பாடசாலை வளவில் ஏராளமான கனிதரு மரங்களும். நிழல்தரு மரங்களும் நாட்டப்பட்டன.

மரம் நடும் இயக்கம் தொடர்பாக தொழிலதிபர் திரு. க. கனகராசா பல பிரசுரங்களை அன்பளிப்புச் செய்தார்.

கல்லூரியின் விவசாய ஆசிரியர்களான திரு. கருணநாயகம், திருமதிரி. ஜெயானந்தன் ஆகியோர் மாணவர்கள் தமது வீட்டு வளவில் நட்டு வளர்க்கக்கூடிய பலா, தோடை, கொய்யா. நெல்லி. முதலான மரங்களை மாணவர்களுக்கு வழங்கினர். (அ)

---

# இரவுபஸ்சேவை:8மணியுடன் நிறுத்த ஆலோசனை

(கரவெட்டி)

அண்மைக்காலமாக இரவு 8 மணியுடன் நிறுத்தப்படும் வடபிராந்திய போக்குவரத்து சபையின் பஸ் சேவையை நிரந்தரமாகவே எட்டுமணியுடன் நிறுத்துவதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் ஆலோசித்துவருவதாகத் தெரியவருகிறது.

மக்கள் நடமாட்டம் இரவு எட்டு மணியளவுடன்குறைந்து விடுவதாலேயே இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்பொழுது தனியார் பஸ் சேவை இரவு ஒன்பதரை மணி வரை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

---

# நெல்லியடி, கரவெட்டியில் பொலிசார் இரவு ரோந்து

(கரவெட்டி)

நெல்லியடி, கரவெட்டி பகுதிகளில் பருத்தித்துறைப்பொலிசார் இரவு ரோந்து சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் இப்பகுதிகளில் இடம்பெற்ற குற்றச்சம்பவங்களையடுத்தே இவர்கள் இக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்தமாதம்நெல்லியடியில் சீருடையில் வந்த பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தாக்கப்பட்டார். அதே நேரத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த நெல்லியடி நகரப்பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு அருகாமையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர்களை விசாரிக்க நெருங்கியபோது கத்திக்குத்துக்கு ஆளானுர்.

காங்கேசன்துறை பதில் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஏ. பொத்தேஜ் விசாரணைகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து பருத்தித்துறைப்பொலிசார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

---

## வேளாண்மைப் பிரார்த்தனை

(புலோலி)

பருத்தித்துறை அம்பன் கமகமநலச் சேவை நிலையத்தில் பெரும்போக வேளாண்மை விளைவுகள் வெற்றிபெறவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கும் சமய விழா சிறப்பாக நடைபெற்றது.

அம்பன் கமநலச் சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு சோ. பரமசிவராசா தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் விவசாயப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர். (க)

**லதா** (கொண்டாவில்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - சரிதா
**கீழ்வானம் சிவக்கும்**

**சாந்தி** யாழ்நகர்
10.30, 2.15, 4-45, 7-00.
Terence Hill
Ernest Borgnine
SUPER SNOOPER
Action-Comedy-Color

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-30, 6-00
ஜெமினி - அஞ்சலிதேவி-
வீரப்பா
**வீரக்கனல்**
(புதிய பிரதி)

**றீகல்** (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Last few days. No more extension. Film withdrawn by the Film Corporation. DOGS OF WAR You can NEVER see this film again.
* கடைசி சில தினங்கள். * மேலும் நீடிக்கப்பட மாட்டாது. * திரைப் பட கூட்டுத்தாபனம் இப்படத்தை திருப்பி அனுப்பும்படி அறிவித்திருக்கிறது. * உங்களால் ஒருபோதும் இப் படத்தை திரும்பவும் பார்க்கமுடியாது.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR

1-11-83 வரை
**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ்
**துணை**
(கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
கலைஞர் கருணாநிதி அவர்களின் கைவண்ணத்தில் உருவாகி முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களின் ஒப்பற்றநடிப்பால் ரஸிகர்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்ற உன்னத தீந்தமிழ் திரையோவியம்
எம். ஜி ஆர். - பத்மினி
நம்பியார்
தங்கவேலு - ராஜசுலோசனு நடித்த
**அரசிளங்குமரி**
(புத்தம் புதிய பிரதி)

கடைசி 2 தினங்கள் மட்டும்
**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 5-00, 7-15
"RAID ON ENTEBBE"
in
**Operation Thunderbolt**
The way it. Really happened
The Tense Action - Packed Story of the Raid that startled the World.
இப்படம் 4ந் திகதி ஆயுதப்படையினர் பார்வைக்குப்போவதால்பார்க்காதவர்கள் கூடிய கெதியில் பார்த்துமகிழுமாறுவேண்டிக்கொள்ளுகிறோம்.

அரிய சந்தர்ப்பம்! தவற விடாதீர்கள்... யாழ். நகரில் இதுவே கடைசித் தடவையாக காண்பிக்கப்படும்.
**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி-வாணிஸ்ரீ
**வசந்த மாளிகை**
(புதிய பிரதி)

**லிடோ** யாழ் நகர்
தினசரி
9-10 2-15, 6 30
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 6-30
கமல்
ஸ்ரீதேவி **குரு**
7 11-83 முதல்
36th CHAMBER OF SHAOLIN

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4 30, 7-00
"IT COULD HAPPEN TO YOU"
A film on V. D.
(Strictly for Adults)
This film deals with Sexually Transmitted diseases. Patrons are advised that it contains scenes and subject matter which may be unsuitable for certain sensitive members of the public. EVERY TEENAGER above 18 years must not miss this film.


# "சைவப் பணியின் ஒலி ஓய்ந்துவிட்டது"

(யாழ்ப்பாணம்)

"நடைமுறைத்தமிழ் இயக்கத்தின் பிரமுகரும் நாவலர் சபையின் அமைப்பாளருமான இளையதம்பி அவர்களது மறைவுச் செய்தியை வானொலியிற் கேட்ட இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் சைவதமிழ் ஓசையை உலகெங்கும் எழுப்பிய சைவமணியின் ஒலி ஓய்ந்து விட்டது என்றார். நாவலர் சபையின் உயர் தனி வளர்ச்சிக்கு உழைத்த உத்தமரான திரு. இளையதம்பி மிகவும் சுறுசுறுப்பு உள்ளவர். அவ்வாறு மற்றவர்களையும் சுறுசுறுப்புடன் பொது விடயங்களில் ஈடுபடச் செய்தவர். சஞ்சிகைகள் பத்திரிகைகள் மூலம் அவர் ஆற்றிய சைவதமிழ்ச் சேவை உன்னதமானது உலகுள்ள வரை திரு. இளையதம்பி அவர்களது புகழும் நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

நாவலர் சபையின் பிரமுகரான திரு. க. இளையதம்பியின் மறைவையொட்டி இரங்கல் நடைபெற்ற நிகழ்ச்சியில் பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபையின் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாவலர் சபையின் செயலாளர் திரு. சி. விசுவலிங்கம் பேசுகையில் நாவலர் சபையின் பணிகளுக்கு உயிர்நாடியாக விளங்கிய தம்பி இளையதம்பி அவர்கள் எம் போன்றவர்களை உற்சாகப்படுத்தி இயங்கவும் வைத்தார்என்றார். பண்டிதர் மு. கந்தையா உரை நிகழ்த்துகையில் 'அன்பும் பண்பும் சேவையும் உணர்ச்சியும் கொண்டவர்திரு. இளையதம்பி. வருங்காலச் சந்ததியின் நல்வாழ்வு கருதி திருமுறைவகுப்பு இசை வகுப்பு, புராண வகுப்பு சமய வகுப்பு என்பன நாவலர் நிலையத்தில் இடம்பெற உழைத்தவர்' என்றார்

திரு. ஐ. தி. சம்பந்தன் பேசுகையில் 'நாவலர் பெருமான் சிலை நிறுவப்பட்டிருக்கும் ஆதனம், நாவலர் கலாச்சார நிலையம் நிறுவப்பட்டிருக்கும் ஆதனம் இவற்றுக்கான சான்றுகளைத் தேடி எடுத்து நாவலர் சபைக்கு உதவிய திரு. இளையதம்பி பெரியதோர் உழைப்பாளி' என்றார்.

நாவலர் சபையின் கொழும்புப் பிரதிநிதி உட்படப் பலர் இரங்கல் உரை நிகழ்த்தினர்.

## ரூபவாஹினியில் இன்று

| | |
|---|---|
| 6-00 | இன்றைய நிகழ்ச்சிகள் |
| 6-02 | 'லஸி' நாயொன்றின் தீரச்செயல்கள் (ஆங்கிலம்) |
| 6-30 | 'கலை அரங்கம்' (தமிழ் நிகழ்ச்சி) |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | விளையாட்டுப் பயிற்சி |
| 7-30 | தகவல் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-30 | குறுந்திரைப்படம் (சிங்களம்) |
| 9-00 | வெளிநாட்டுச் செய்தி விமர்சனம் |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | 'ஹவாய் 5 ஓ' துப்பறியும் தொடர் (ஆங்கிலம்) |

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

# வழங்குநர்களைப் பதிவுசெய்தல்-1984

1. 1983-ம் ஆண்டுக்குப் பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையுடன் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரசித்திபெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. ஒவ்வொரு இனவகைப் பொருட்களை விநியோகிப்பதற்குத் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல்வேண்டும்.
3. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 9-12-83 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக உரிய பதிவுக்கட்டணம்/வைப்புப்பணம் ஆகியவற்றுடன் அனுப்பப்படல்வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவுசெய்தல்-1984" எனத் தெளிவாகக் குறிப்பிடல்வேண்டும்.
4. பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் பட்டியலில் இருந்து வழக்கமாகக் கேள்விகள் கோரப்படும். ஆனாலும், தேவைகளைப் பொறுத்து வேறு வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகளைப்பெற்று பொருட்களைக் கொள்ளவனவுசெய்ய இச்சபைக்குப் பூரண உரிமையுண்டு.
5. நேரகாலத்துக்குக் கூறுவிலைகளை அனுப்பவோ அல்லது கட்டளைகளை நிறைவேற்றவோ தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக்கூற்றுகட்கு அல்லது மாதிரிகளுக்கு அமையாதவிடத்தும், அத்தகைய வழங்குநர்களின் பதிவுகள் வழங்குநர் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், மற்றும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன பதிவுக்கட்டணம், வைப்புப்பணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

| பொருட்கள் | வைப்புப்பணம் | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| **பொது** | | |
| 1. காகிதாதிகள் அச்சடித்தல் வேலைகள் | 250/- | 50/- |
| 2. அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் | 250/- | 50/- |
| 3. சுகாதாரப் பொருட்கள் (மலசலகூட, தோட்டி வீதி வேலை ஆகியவற்றுக்கான களஞ்சியப்பொருட்கள், கோலவுடை ஆகியன | 250/- | 50/- |
| 4. பவுசர், டிராக்டர் ஆகியவற்றுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் இரும்புவகைப் பொருட்கள் | 250/- | 50/- |
| 5. அலுவலக உபகரணம், தளபாடம் ஆகியவற்றுக்கான திருத்த வேலைகள் | 250/- | 50/- |
| **மின்சாரம்** | | |
| 1. மின் சேவை இணைப்புகள், வீதி வெளிச்சம் மின் உப நிலையங்கள் ஆகியவற்றுக்கான உபகரணங்கள் | 1000/- | 100/- |
| 2. பி. வி. சி. மின் வடங்கள், கடத்திகள் | 1000/- | 100/- |
| 3. வலுவூட்டப்பட்ட கொங்கிறீற் மின்கம்பங்கள் | 1000/- | 100/- |

**தேவநேசன் நேசையா**
செயலாளர்
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

அபிவிருத்திச்சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்,
1983-10-25.

9610

# நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

ஈடு/764

1. செல்லையா கைம்பெண் இராசம்மா
வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

1. சின்னத்துரை திருநாவுக்கரசும்
2. பெண் ஞானமணியும் தற்போது கார்த்திகேசு வித்தியாலயம், மண்டைதீவு இருவரும்,
இல. 6 ஒடை ஒழுங்கை வண்ணார்பண்ணை மேற்கு
எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஆதனம் 1983ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ம் திகதி (14-11-1983) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 6000/-ம் மேலும் ரூபா 3000/-ற்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 14 வீதம் வட்டி வீதம்வழக்கு அணைத்ததிகதியாகிய1978ம் ஆண்டு பங்குனி மாதம் 23ம் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1980ம் ஆண்டு சித்திரை மாதம் 30ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 1676-55 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 576-55 நடைபெறவேண்டிய செலவு ரூபா 650/- மேலதிக சமயாசமய செலவு ரூபா 450/-, கொடுக்க வேண்டியிருப்பதாலும் இதில் 2ம் எதிராளியால் 15-9-80ல் கொடுக்கப்பட்ட ரூபா 3500/- செலவால் கொடுக்கப்பட்ட ரூபா 100/- 1ம் எதிராளியால் செலவால் கொடுக்கப்பட்ட ரூபா 1200/- கழிக்கப்படவேண்டும்.

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வடமேற்கு இறை "வீரதேவன்வளவு" நிலப்பரப்பு 1 குளி. 6.36 பதிவு டி 359/85 உத்தரவுபெற்ற உலாந்தா என். தேவராஜனல் 1-6-1969ல் 1 2ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட வரைபடத்தில் துண்டு 1 எனக்குறிக்கப்பட்டது. இதில் கிழக்குப்பக்கமாக நிந்தமாக நிலப்பரப்பு ஒன்று (நி. ப. 1) எல்லை கிழக்கு குறித்த டி 375/- 20வரைபடத்தில் பகுதி 2 சண்முகநாதன் பெண் சரோஜினி தேவிக்குரிய ஆதனமும், குறித்த வரைபடத்தில் பகுதி 4 எனக்குறிக்கப்பட்ட வழியும் வடக்கு நடராயபிள்ளை சுப்பையாப்பிள்ளை மகள் வனஜா யின் ஆதனமும் மேற்கு சின்னப்பு சின்னத்துரைக்கும் பங்காளருக்கும் கனகரத்தினம் பெண் மனோன்மணியின் ஆதனம் தெற்கு படத்தில் 5:b பகுதியாகக் காணப்படும் துண்டு பொன்னுச்சாமி இராசேந்திரத்திற்குரிய ஆதனம்

**சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.**
(L. I. V., S. C. V.)
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.
20-10-83

9634

# 'தீபாவளிச் சந்தை'யால் மாநகரசபைக்கு வருமானம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 'தீபாவளிச் சந்தைக்கு' வெளியூர் வியாபாரிகளின் படையெடுப்பு அதிகரித்துள்ள அதேநேரத்தில் யாழ். மாநகர சபையின் வருமானமும் அதிகரித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இச் சந்தைமூலம் யாழ். மாநகர சபைக்கு 700 ரூபா கிடைத்துள்ளது. நேற்றுமுன்தினம் இத்தொகை 800 ரூபாவாக அதிகரித்துள்ளது.

வெளியூர் வியாபாரிகளுக்குத் தேவையான வசதிகளை, யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சி. வீ. கே. சிவஞானம் செய்திருக்கிறார்.

சந்தை நடைபெறும் பகுதியில் புதிதாக 18 மின்சாரபல்புக்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன், திறந்தவெளி அரங்கிலிருந்து குடிநீர்வசதியும் செய்யப்பட்டுள்ளது. இச்சந்தை தினமும் இரவு 9 மணிவரை நடைபெறுகிறது.

பஸ் நிலையச் சுற்றுடல் பகுதியில், புதிய வியாபாரிகளும், நடைபாதை வியாபாரிகளும், கடைகள் நடத்த அனுமதிக்கப்படமாட்டார்களென யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாது தடுக்க யாழ். பஸ்நிலையச் சுற்றுடலிலிருந்து முனீஸ்வரன் வீதிக்கு இச் சந்தையை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்த யாழ். மாநகரசபை, தற்போது வரிசெலுத்தாது அங்கு வியாபாரம் செய்வோரை அகற்றுவதற்குப் பொலிசாரின் உதவியுடன் நடவடிக்கை எடுத்துவருகின்றது. (க)

## 4,000 ரூபா கொள்ளை!

(வேலணை)

வேலணை வங்களாவடிச்சந்தியில் கத்திமுனையில் நாலாயிரம் ரூபா கொள்ளையிடப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று வேலணை இலங்கைவங்கியில் பணத்தை வைப்பிலிட வந்த இளைஞரை வழிமறித்த இருவர் கத்திமுனையில் அவரை மிரட்டி அவரிடமிருந்த 4 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்தனர்.

இதனையடுத்துப் பணத்தைப் பறிகொடுத்தவர் வேலணை இலங்கைவங்கியுடன் தொடர்பு கொண்டு பொலிசாருக்குப் புகார் கொடுத்தார். (கி-கு)

# இப்படியும் நடக்கிறது

இலங்கைத் தமிழர் பற்றிய புகைப்படக் கண்காட்சி ஒன்று கடந்தவாரம் திருச்சியில் நடைபெற்றது.

இதில் சிறப்பான அம்சம் என்னவென்றால்; மதத்துறையில இருதுருவங்களாகத் திகழும் திராவிட கழகமும், மதுரை ஆதீனமும் கலந்துகொண்டதுதான்!

வழக்கமாக வீரமணியிடமிருந்துதான் 'பீரங்கியை எதிர்பார்க்கலாம். இதற்கு மாறாக மதுரை ஆதீனத்தாரிடமிருந்து 'ராக்கெட்' வீச்சில் ஆக்ரோஷம் கிளம்பியது!

''தமிழனுக்கு உலகில் எங்கு அநீதி நடந்தாலும் அதற்கு செவிசாய்க்க ஆதீனம் அனைத்து தமிழ்த் தலைவர்களுடனும் சேர்ந்து இயங்கத் தயங்காது...'' என்று குரல் கொடுத்த ஆதீனத்தார்; ஒரு கட்டத்தில்—

''நாம் துப்பாக்கி ஏந்தவும் தயார்'' என்றுகூறி அவரது உதவியாளர் ஒருவரிடம் ஒரு பெரிய துப்பாக்கியைப்பெற்று அதனைக் கையில் தூக்கிப்பிடித்து கோஷித்துவிட்டு, மற்றுமொரு உதவியாளரிடம் கைத்துப்பாக்கி ஒன்றைப்பெற்று; ''இது நிஜக் கைத்துப்பாக்கி; ஜேர்மனியில் செய்தது. ஆறுமுறை சுடும். என் கூற்றுப் பிழையானால் யாரும் இதனைப் பரீட்சிக்கலாம்...'' என்றாரே பார்க்கலாம்! விண் அதிர்ந்தது!

நாம் ஏதோ நினைத்தோம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல. முழு இந்தியாவிலேயே என்னவெல்லாம் இப்பொழுது நடக்கிறது போல் தெரிகிறது.

உருத்திராட்ச மணிகளை உருட்டிய மதுரை ஆதீனத்தின் கைகளே துப்பாக்கிக் குண்டுகளை உருட்டுவதானால்.........?

— ஊடுருவி

# யாழ். வரும் முதலாவது மே. ஜேர்மன் பயணிகள்

[மாவிட்டபுரம்]

அண்மையில் நடந்த இனக் கலவரங்களின் பின்னர் மே. ஜெர்மனியைச்சேர்ந்த உல்லாசப்பயணிகள் குழுவொன்று முதல் தடவையாக நாளை யாழ்ப்பாணம் வருகிறது.

இக்குழுவில் பத்துப்பேர் அடங்குகின்றனர். இவர்கள் அனைவரும் காங்கேசன்துறையிலுள்ள லங்கா சிமெந்து கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 'ஹாபர் வியூ' உல்லாசப்பயண ஹோட்டலில் தங்குவார்கள்.

''இந்த மே. ஜெர்மன் உல்லாசப்பயணிகள் யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்களையே கழிப்பார்கள். இவர்களை வடபகுதியின் முக்கிய இடங்களுக்கு ஹோட்டல் சார்பில் கூட்டிச்செல்லப்படுவர்'' என்று அந்த ஹோட்டல் முகாமையாளர் திரு. என். வீரசிங்கம் தெரிவித்தார்.

மேலும்பல உல்லாசப்பயணிகளும் எதிர்வரும் வாரங்களில் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## முழங்காவில் மரக்கறி ஏற்றுமதிக் கிராமம்

(யாழ்ப்பாணம்)

முழங்காவில், வெள்ளாங்குளத்தை மரக்கறி ஏற்றுமதிக் கிராமமாக்குவதற்கு பிரதேச அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது..

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் திரு. சண்முகராசா இதற்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் ஆகியோர் இதுபற்றி அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளார். (மா-க)

# எதிரிகள் மூவரும் விடுதலை; மரங்கள் ஒப்படைப்பு

(புலோலி)

அனுமதிப் பத்திரமின்றி சுமார் 1700ரூபாபெறுமதியான காட்டுமரங்களை உழவு இயந்திரத்தில் கடத்திச் சென்றார்களெனக் குற்றஞ்சாட்டி பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் மூவரையும் விடுதலை செய்த நீதவான் உழவு இயந்திரத்தையும் மரங்களையும் திருப்பி ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறைப் பொலிசார் உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவக்கொழுந்து மனோகரன், இராமலிங்கம் மார்க்கண்டு, இராசரத்தினம் லோகராசா ஆகிய மூவரும் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக சுமார் 1700 ரூபா பெறுமதியான காட்டுமரங்களை உழவு இயந்திரத்தில் ஏற்றி வந்ததாகக்குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இம்மரக்கடத்தல் வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் நடைபெற்றது. எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். ஸ்ரீசிவாயா, என். கிருஸ்ணராசா ஆகியோர் ஆஜராகியிருந்தனர். நீதவான் விசாரணையின் பின்எதிரிகள் மூவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்ததுடன் உழவு இயந்திரத்தையும் மரங்களையும், யும் திருப்பி ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (கு)

## கேரதீவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றிருக்கலாமெனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர். கடந்த சனிக்கிழமை இரவு 9-30 மணியளவில் கார் ஒன்றில் கேரதீவுத்துறைக்கு வந்த 8 துப்பாக்கி இளைஞர்கள் அங்கு காவலுக்கு இருந்த காவலாளியையும், மற்றும் 5 ஊழியர்களையும் ஒரு அறையில் வைத்துப்பூட்டிவிட்டு அங்கிருந்த பூநகரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இயந்திரங்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை வேலைக்குவந்த ஏனைய ஊழியர்களே அறையில் பூட்டப்பட்டிருந்த இந்த 6 ஊழியர்களையும் விடுவித்தனர்.

### கார் கடத்தல்

இதேவேளையில் அதேதினம் இரவு 7 மணியளவில் திரு. நடராசாவின் கல்வயலில் உள்ள இல்லத்திற்குச் சென்ற 8 இளைஞர்கள் திருமதி நடராசாவைத் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி அங்கிருந்த காரைக் கடத்திச் சென்றனர்.

இதுகுறித்துச் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜி. டி. ஸ்ரான்லஸ் விசாரணை நடத்திவருகிறார்.

# நவீனரக வாகனங்களில் இராணுவத்தினர் ரோந்து

(யாழ்ப்பாணம்)

நவீன கருவிகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் இராணுவத்தினர் இப்போது ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எதிரிகளின் தாக்குதல்களால் பாதிப்பேற்படாத வகையில் இந்த ஆயுத வாகனங்கள் அமைந்துள்ளன.

கவசவண்டி, அதிவேகமாக நீர்பாய்ச்சும் இயந்திரக்கருவி பொருத்தப்பட்ட வாகனங்கள் பீரங்கி, வயர்லஸ் பொருத்தப்பட்ட வாகனங்கள் போன்றவற்றில் இராணுவத்தினர் ரோந்து புரிகின்றனர்.

அண்மைக் காலங்களில் இராணுவத்தினர் மீது நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களையடுத்து இராணுவத்தினர் பாதுகாப்பாக இருந்து எதிர் தாக்குதல் நடத்தக் கூடியதான நவீன ஆயுத வாகனங்களில் ரேந்து புரிகின்றனர். (மா)

## பாஸ்போர்ட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாவேஜுகளை நேற்று முன்தினம் மேலிடத்திலிருந்து வந்த அதிகாரிகள் ஆயுதப் படையினரின் பாதுகாப்புடன் கொழும்புக்கு கொண்டுசென்றனர். இவற்றில் முன்புவிண்ணப்பித்த விண்ணப்பங்களும் புதிய விண்ணப்பங்களும் அடங்கும். [கு]

## நள்ளிரவில்.:.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரையின் தொகுதி அலுவலக எழுதுவினைஞர் திரு. டொட்டி பிரான்சிஸின் மகன் வசந்தராஜ், மட்டக்களப்பு முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ். பாலசுந்தரம் (குபேரன்), அன்ரனி பல்சோ, எஸ். அம்பிகா ஆகியோரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்;

சிவப்பு மையினால் எழுதப்பட்டிருந்த மேற்படி சுவரொட்டிகளுக்கு அடியில் 'பிரசுர வாரியம், தமிழ் ஈழநாகப் படை' என்று குறிக்கப்பட்டிருந்ததாம்.

'அரச கூலிப் படைகளே எமது விடுதலைப் போராட்டத்துக்கு குறுக்கே நிற்காதீர்' என்று சுவரொட்டிகளில் எழுதப்பட்டுள்ளது.

## இன்று தையல் பொருட்காட்சி

(மாவிட்டபுரம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க தையற் பயிற்சி நிலையத்தில் தையற் பொருட்காட்சியொன்று இன்று நடைபெறுகிறது.

மேற்படி சங்கத்தின் சார்பில் தொழிற்திணைக்கள உதவியுடன் இடம்பெற்று வந்த தையற் பயிற்சி வகுப்பில் தயார்செய்யப்பட்ட பொருட்களே இக்கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

இக்கண்காட்சியை யாழ். தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. என். தியாகராஜா திறந்துவைப்பார்.

## இளைஞர்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளாம்.

இவர்கள் கைதுசெய்யப்பட்டது சம்பந்தமாக இளைஞர்களது பெற்றோர் கோப்பாய் எம். பி. திரு. ஆ. மு ஆலாலசுந்தரத்துக்கு முறையிட்டுள்ளனர். கோப்பாய் எம். பி. இதுவிஷயம் குறித்து யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுடன் தொடர்புகொண்டுள்ளார்.

### சங்கரத்தையில்

நேற்றுகாலை சங்கரத்தையில் வசிக்கும் ஒருவரை, இராணுவத்தினர் கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### P. M. போல்பிள்ளை - சட்டத்தரணி

P. M. போல்பிள்ளை சட்டத்தரணி, Inner Vanderwert Place, Dehiwela) காலமானார். இவர் அஞ்சலாவின் அன்புக்கணவரும், தனபாலன், மனோகரன், றதி ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், குலேந்திரன், பரிமளம், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரது பூதவுடல் இன்று (1-11-83) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்துக்காகச் சில்லாலை இன்னாசித்தம்பி வளவு இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும்.

9 46

## மரண அறிவித்தல்

### - கனகேஸ்வரி மயில்வாகனம் -

சுன்னாகம் ஏழாலை கிழக்கு கனகேஸ்வரி மயில்வாகனம் அகாலமரணமெய்தினார். இவர் காங்கேசன் துறைப் பொலிஸ் உத்தியோகத்தர் மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், செல்லையா, காலஞ்சென்ற தங்கம்மா தம்பதிகளின் அருமை மகளும், திருகோணமலைத் துறைமுக ரலி கிளாக் கனகரத்தினம், திருகோணமலை பிறிமா ஆலை தருமரத்தினம், சிவஞானம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்லத்துரை, பாலசரஸ்வதி, சாந்தி ஆகியோரின் மைத்துனியுமாவார். ஈமக்கிரிகைகள் இன்று 01-11-83 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஏழாலை கிழக்கு மயானத்தில் நடைபெறும்.

9647

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், வெலிங்டன் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number B 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telegram, Eelanadu, Telephone: 22389—24126.